www.tamilarangam.net

# தூண்டில்

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

எழுதியவர் : பார்த்திபன்

விடயம் : முழு நாவல்

முகவரி : SUDASIEN BURO
Kiefernstr 45
D-5600 Wuppertal 2

விலை : 5,- டி.எம்
(5,-டி.எம் பெறுமதியான புதிய முத்திரைகளையும் அனுப்பி வைக்கலாம்)




" நான் பாக்கேலை.என்ன எழுதியிருக்கிறார்?"

"பெண்களே திருமணம் வேண்டாமாம்"

"எல்லாத்தையும் எழுதி முடிச்சு இப்ப புதுசா கண்டுபிடிக்கினமோ?"

— நாவலின் ஒரு பகுதியிலிருந்து—

பக்கங்கள் 132.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்களைப்பற்றி நாங்கள்

உங்களுடன் மனம்விட்டுக் கதைப்பதற்கு வந்துள்ளோம். "உங்களுக்குக் கொள்கை எதுவுமில்லை", 'தெளிவில்லை", "பொறுப்புணர்ச்சியில்லை" என்று பல வாசகர்கள் எங்களை விமர்சித்திருந்தார்கள். "சம்மட்டியாலே அடித்துடைப்பது போல சீர்திருத்தம் செய்ய நினைக்கிறீர்கள். மெல்ல மெல்லமாகத்தான் இதைச் செய்ய வேண்டும்" என்றும் சிலர் விமர்சித்தார்கள். இந்த நிலையில் எங்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிப்பது நியாயமானதுதானே?

நாங்கள் யார்? பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தாய் மண்ணைவிட்டு அந்நிய தேசத்தில் தங்கியிருப்பவர்களில்தான் நாங்களும் அடங்குகிறோம். குருட்டுத்தனமான நம்பிக்கையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயக்கச் சார்பாக இருந்து, உண்மைநிலை புரிந்தபின் விலகி, ஒதுங்கி அதிலும் எந்த விடிவும் இல்லையென்று புரிந்ததினால்தான் 'தூண்டில்' போட ஆரம்பித்தோம். எந்தவித பத்திரிகை முன் அனுபவமில்லாமலிருந்தாலும், பிரச்சினைகளை ஓரளவுக்கு மட்டும் ஆராயவே தெரிந்திருந்தாலும் நாங்கள் சஞ்சிகையை ஆரம்பித்தன் நோக்கத்தை 'தூண்டில்' என்று பெயர் வைத்ததன் காரணத்தை தெளிவு படுத்துவதன் மூலம் புரிந்து கொள்வீர்கள்.

எங்களுக்கு எந்தவித திறமையுமில்லைத்தான். பூரணமான படிப்பறிவும் இல்லைத்தான். ஆனால் நல்லவற்றைத், தரமானவற்றை, பயனுள்ளவற்றை சேகரிக்கும் ஆர்வம் இருக்கிறது. எமக்குத் தெரிந்தவற்றை, எமக்குக் கிடைப்பவற்றை மற்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ளும், பரிமாறிக் கொள்ளும் விருப்பத்தில்தான் தூண்டில் என்று பெயர் வைத்து சமூக, கலை, இலக்கிய, அரசியல் தேடலில் இறங்கியிருக்கிறோம். இந்தத் தேடலில் எந்த மிகைப்படுத்தலையும் நாம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலில் எந்தவிதமான பூரணத்துவம் இல்லாவிட்டாலும், அ
பவங்கள் இல்லாவிட்டாலும் மனிதத்தை நேசிக்கும் உணர்வு இருக்கிறது. ம
களுக்கு எவை அத்தியாவசியப்படுகின்றன? எப்படியான சமூகக் கட்டுக்குள்
நாங்கள் கட்டப்பட்டிருக்கிறோம் என்பதில் ஓரளவு தெளிவிருக்கிறது. இவற்
தகர்த்து, கட்டுகளை அகற்றி, அனைவரும் ஒன்றிணைந்து புதிய சமுதாயத்தி
காக, எங்களுக்காக நாங்களே போராட வேண்டுமென்ற என்ற கருத்தில்
அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட நாம், அந்த இலக்கை நோக்கிய
வழி வகைகளை, உங்களுடன் சுதந்திரமான முறையில் பரிமாறிக் கொள்ளும்
பகிர்ந்து கொள்ளும் ஊடகமாகவே தூண்டிலைப் போட்டு வருகின்றோம்.

கல் தடக்கி கீழே விழுந்தவருக்கு வைத்தியம் படித்தவர் மட்
டும்தான் உதவ வேண்டுமென்றில்லை. மனிதாபிமானம் உள்ள யாரும் உதவ
செய்யலாம். இந்த ரீதியில்தான் எந்தத் தேர்ச்சியுமில்லாமல் சில பிரச்சி
னைகளை நாம் ஆராய்கிறோம். எம்முடைய பார்வையில், எமக்குச் சரியென
படுபவைகளைத் தருகிறோம். இவை அத்தனையையும் எல்லோரும் ஏற்க வே
டுமென்றோ, இவை மட்டும்தான் சரியென்றோ எந்த நிர்ப்பந்தமுமில்லை. நீங்
கள் தாராளமாக உங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம். நீங்கள் தை
ரியமாக, ஆக்கமாக விமர்சிக்க, ஆராய முன்வர வேண்டுமென்பதற்காகத்
தான் எங்களைப் பற்றி நாங்களே விமர்சிக்கிறோம். சிலருடைய வாசகர்க
கடிதங்களிலிருந்து அவர்கள் எங்களை வேறுவிதமாக கற்பனை செய்திருக்கி
றார்களோ என்ற கருதியல்தான் உங்களுக்கும் எங்களுக்குமிடையில் எந்தவித
போலிக் கவர்ச்சி மாயைகளும், திரைகளும் இருக்கக் கூடாதென்பதில் அக்
கறையாக இருக்கிறோம்.

விடுதலைக்கென ஆரம்பித்த போராட்டம் மக்களிலிருந்துவிலகி
அடிப்படைத் தேவைகளிலிருந்து நழுவி, அந்நியப்பட்டு எங்கே போய்க் கொ
ண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட நிலையில், தமிழ்ச் சமுதாயத்தில்
வேரோடியுள்ள சமூகச் சீர்கேடுகளை களைய முயலாத, தனியே ஆயுதத்தை
மட்டும் பின்தொடர்ந்து கொண்டிருக்கும் 'போராட்டத்தில்' எந்தக் குழு
வையும் சார நாம் விரும்பவில்லை. இதைத்தான் தூண்டில் அறிமுகத்தியம்
குறிப்பிட்டோம். தமிழ் இனம், ஒரு மதம் என்ற குறுகிய நோக்கில் மட்டும்
எமது பார்வை இருக்கக் கூடாதென்பதற்காகவே எந்த இன, மதத்துக்கும்
சார்பில்லாமல் என்று எழுதியிருந்தோம். நாங்கள் ஒடுக்கப்படும் மக்களின்
சார்பாகவே, அவர்களாகவே இருக்கிறோம். இந்தச் சார்பிலேயே எழுது
வோம்.

இன்றைய காலகட்டத்தில் மறுக்கப்பட்ட அடிப்படை உரிமை
களை, சுதந்திரங்களை ஒடுக்கப்பட்டோர் அடைவதற்கு அடிப்படை அரசி
யல் அறிவுடனான ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்
பதை நாம் மறுக்கவில்லை. அதற்காக ஆயுதம் மூலம் சாதிக்கும் அத்தனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யையும் ஏற்றுக்கொள்ள முடியாது. சரியான வழியில் நடத்திச் செல்லப்படாத சரியான திசைக்குத் திருப்பப்படாத, குறுகிய எண்ணங்களின் அடிப்படையில் துரோகங்களுக்காகப் பாவிக்கப்படும் ஆயுதங்களுக்கெதிராக நாங்கள் நிச்சயம் முரண்படுவோம். இந்த விடயத்தில் நிச்சயமாக எங்களுக்குத் தெளிவுண்டு.

வெகு வேகமாக கொலைக் கலாச்சாரம் பரவி வரும், நேரத்தில், அனைவரையும் மனிதத்தை மறக்கச் செய்து கொண்டிருக்கும் நேரத்தில் நாங்கள் அதைத் தொடுவோம். இதை எப்படியான கண்ணோட்டத்திலும் யார் கண்டித்தாலும் எமது நிலையிலிருந்து விலகப் போவதில்லை.

உங்களிடமிருக்கும் திறமைகளுக்கும் இடம் கொடுத்து, அதை அனைவருக்கும் கிடைக்கச் செய்து சுதந்திரமான கருத்துப் பரிமாறலுக்கு தூண்டில் மூலம் ஏற்பாடு செய்து வருகிறோம். நாங்களும் உங்களிடமிருந்து நிறையப் படித்து வருகிறோம். இதுவரை தூண்டில் மூலமாக உங்களுடன் பகிர்ந்து கொண்டவற்றிலிருந்து எங்களைப் புரிந்து கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம்.

இதுவரை பன்னிரண்டு மாதங்களாக உங்களுடன் சேர்ந்து தூண்டில் போட்டிருக்கிறோம். பன்னிரண்டு தடவைகளும் தூண்டிலில் சிக்கியவற்றைப் பற்றி முழுமையான கண்ணோட்டத்தை உங்கள் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்.

இதுவரை எங்களுக்கு ஆதரவளித்த ஓவியர்கள், ஆக்கதாரர்கள், விமர்சகர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் உங்கள் அனைவருடையதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

## கேள்வி — பதில்

தூண்டில் கலம் 14இல் இடம்பெற இருக்கும் 'கேள்வி-பதில்' பகுதியில் உங்களுடைய கேள்விகளுக்கு கவிஞர் சேரன் பதிலளிக்கிறார். அரசியல், இலக்கியம் சம்பந்தமான உங்களுடைய பயனுள்ள கேள்விகளை 05.01.89 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓ..... விபச்சாரி

ஓ...விபச்சாரி
உன் நிலை புரிகிறது எமக்கு.
நாமோ எமது கூலியுழைப்பை உழைப்புச்சக்தியை
அடகு வைக்கிறோம் மூலதனத்திடம் முதலாளி வர்க்கத்திடம்.
ஆனால் நீயோ
உன்னையே உன் உடலையே
விற்கிறாய் மற்றொருவனுக்கு
குழந்தையின் அழுகுரலிற்காய்...
தங்கையின் திருமணத்திற்காய்...
அந்த சகதியை விட்டு நீ
எழும்ப முயன்றாலும்
இந்த சமுதாயம்
ஆழ அமிழ்த்துகிறது உன்னை.
உன்னாற்தான் சரியாக அனுபவிக்கமுடிகிறது
இந்த முதலாளித்துவ சுதந்திரத்தை.
என் ஒருவனால் உன் ஒருத்திக்கு
உதவ முடியும். ஆனாலும்
உன்னை மட்டும் மீட்பதல்ல
என் கடமை.
உன்னைப்போலிருக்கும் ஒவ்வொருத்தியையும்
மீட்டாக வேண்டும்.
உன்னையும் உன் தோழிகளையும்
மீண்டும் ஆழ அமிழ்த்தும் -
இந்தச் சமுதாய அமைப்புமுறையை
மூலதனத்தால் உருவாக்கியிருக்கும்
இத் தனிச் சொத்தரசுப் பொறியமைவை
தகர்த்தாக வேண்டும்.
உழைக்கும் மக்களை
விழிப்படையச் செய்தாக வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உன் வேதனைகளும் விரக்திகளும்
புரட்சியின் தீப்பொறிகளை
விதைத்தாக வேண்டும்.
சமுதாயத்தை நீ மாற்றியமைக்கும் போதும்
உன்னை மீண்டும் இழக்க நேரிடலாம்.
ஆனால்
என்னால் உணரமுடிகிறது
உனது மகிழ்வலைகளை.
இப்பேரலையின் எதிரொலிகள்
மீண்டும் ஒருத்தியை
உன் நிலைக்கு ஆளாக்கா.
ஆனால்
இப்போது நீ விபச்சாரியல்ல.
ஓர் உழைப்பாளி.
ஆதலால்...
என் காதலி.

இளஞ்செழியன்

---

வாசகர்களுக்கு,

தூண்டில் பற்றிய உங்களது முழுமையான விமர்சனங்களை வரவேற்கிறோம். உங்கள் கடிதங்கள் கூடியளவு சுருக்கமாக எழுதப்பட்டிருப்பின் பக்கங்களின்மை என்ற பிரச்சினை வராததுடன் பல வாசகர்களுக்கு இடமளிக்கும் சந்தர்ப்பமும் கிடைக்கும். இதற்காக உங்களுடைய விமர்சனங்களில் முக்கியமானவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. சாத்தியமானால் மட்டுமே சுருக்கமாக எழுதுங்கள். குறிப்பிட்ட அளவை மீறியதாக உங்கள் கடிதங்கள் இருப்பின் கருத்துச் சிதைவு ஏற்படாதபடி ஓரளவுக்கு கடிதத்தைச் சுருக்கிப் பிரசுரிக்கும் உரிமையை உங்கள் அனுமதியுடன் எடுத்துக் கொள்கிறோம். உங்கள் விமர்சனங்களை கூடுமானவரை பிரதிமாதமும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமூக மாற்றம் என்பது மனமாற்றம் அல்ல.

....உமா

இன்று பலர் பெண் ஒடுக்குமுறைபற்றிப் பேசும் போது சீதனத்தையே பெரும் பிரச்சனையாகக் கருதுகிறார்கள். இன்று இலங்கையில் இச்சீதனப் பிரச்சனையானது செல்வந்தர்களிடமும், மத்திய தர வர்க்கத்தினரிடமுமே கூடுதலாகக் காணப்படுகிறது. செல்வந்தர்கள் தமது சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்காக தமது பெண்பிள்ளைகளுக்கு அதிக அளவு சீதனங் கொடுத்து மணம்முடித்து வைக்கிறார்கள். மத்தியதர வர்க்கத்தினரும் தமது சமூக அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்காக அதிகளவு சீதனம் கொடுக்கின்றனர். எமது சமூகத்தில் சீதனம் கொடுத்துத் தான் தமது மகளுக்கு திருமணம் செய்துவைப்போம் என உயர்மட்ட மத்திய வர்க்கத்தினர் முடிவு செய்கின்றனர். சீதனங் கொடுக்காமல் மண முடித்தால் சமூகத்தில் தகுதி குறைந்தவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். இந்த நிலைமைகளினால் சில கீழ்மட்ட மத்தியதர வர்க்கத்தினர் பெண்களை அதிகளவு படிப்பிப்பதில்லை. அந்தப் பணத்தைச் சேர்த்துவைத்து சீதனமாக கொடுக்கலாம் என்ற வழக்கம் நிலவுகிறது.

அதேவேளை ஆணை அதிகளவு படிப்பித்து அதிக சீதனத்தைப் பெறலாம் என நினைக்கிறார்கள். இதனால் பெண்ணின் தந்தையோ, அண்ணனோ நாள்முழுதும் சீதனத்திற்காக உழைக்கவேண்டிய நிலைமை உள்ளது. சில வசதியுள்ளவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று உழைக்கின்றனர். இத்தகைய கஸ்டங்களுக்கு மத்தியில் சகோதரிகளுக்குச் சீதனம் கொடுத்தாலும் பின் தமது திருமணவேளை வரும்போது சீதனம் கேட்கின்றனர். எமது சமுதாயத்தில் சீதனத்திற்காக வற்புறுத்துவது ஆண் மட்டுமென்று சொல்லமுடியாது. அதில் மாப்பிள்ளையின் தாய், சகோதரி ஆகியோரும் அடங்குவர். ஒரு பெண் தான் அனுபவித்த துன்பங்கள் இன்னொரு பெண்ணுக்கு வரும்போது உணருவதில்லை. இதற்கு அவர்களின் சொத்துரிமைக்குவிப்பும், அவர்களுடன் பின்னிப்பிணைந்துள்ள சுற்றாடலுமே காரணம். இதனால் பெண்களின் வாழ்க்கை மட்டுமல்ல சில ஆண்களின் வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. ஒரு ஆண் சீதனம் வாங்கும்போது தன் சகோதரிக்கும் சேர்த்து வாங்குகிறான். இந்தச் சீதனப்பிரச்சனை எம் மக்கள் எங்கு சென்றாலும் அவர்களுடன் ஒட்டியிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று வெளிநாடுகளிலும் சீதனப் பிரச்சனை நிலவுகிறது. நாம் இருக்கும் சூழல், தமது சொந்த நாட்டின் நிலைமை என்பவை பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. மணமுடித்தபின் அந்நிய நாட்டில் வாழ்ந்தாலும் சீதனத்திற்காகப் பெண்ணைச் சித்திரவதை செய்கின்றனர். குடும்பத்தில் ஒரு சிறிய தகராறு ஏற்பட்டாலும் உடனே இந்த கதை வருகிறது. வெளிநாடுகளில் வசிக்கும்ஒரு சகோதரன் அங்கு வசிக்கும் ஒரு ஆணுக்கு தன் சகோதரியை மணமுடித்து வைக்கும்போது சீதனம் கொடுக்கின்றான். முதலாளித்துவ சுரண்டும் வர்க்கத்தினரால் தமது வேலையில் ஏற்படும் கஷ்டங்களின் மத்தியிலும் தம்மைப்போல் கஷ்டப்படும் இன்னொரு சகோதரனிடமோ, அல்லது தந்தையிடமோ பெண்ணுக்காக சீதனம்கேட்கின்றனர். எமது சொந்த நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ ஒவ்வொரு தொழிலிற்கேற்ப சீதனம் தரப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிப்பவர்கள் சொந்த நாட்டிற்குச் சென்று அங்குள்ள நிலைமை பற்றிச் சிந்திக்காமல் அதிக அளவு சீதனம் வாங்குகின்றனர். சீதனம் வேண்டுவதற்காக தாம் நல்ல உத்தியோகத்தில் இருப்பதுபோன்று பல பொய்களைக்கூறி மணமுடிக்கின்றனர். இந்த நிலைமையில் பல பெண்கள் வாழ்க்கையில் சந்தோசத்தை இழக்கின்றனர். தினமும் கணவர், மாமி, மாமனாரினது சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். சமூகத்தினரின் அவமதிப்புக்குள்ளாகின்றனர். இன்று எமது பெண்கள் பலர் கல்வியறிவு அற்றவர்களாக வாழ்கின்றனர். சில பெண்கள் தமக்கு பெண் குழந்தை பிறந்தவுடன் மனம் வருந்துகின்றனர். பல பெண்கள் சமூகத்தில் வாழத் துணிவில்லாமல் தற்கொலை முயற்சிக்குள்ளாகின்றனர். இந்தச் சீதனப்பிரச்சனை சமூகத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்களிடமும் மலையக மக்களிடமும் காணப்படுவதில்லை. ஏனென்றால் அவர்களிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை.

மலையக மக்கள் வசிக்கும் லயன் அறைகள் அவர்களுக்குச் சொந்தமில்லை. அந்தப் பெண்கள் இளவயதிலேயே மணமுடிக்கின்றனர். அவர்களுக்கு நாளாந்தம் வாழ்க்கையில் வேறுவிதமான பிரச்சனைகள் உண்டு. அவர்களுக்கு சாதாரண மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பல உரிமைகள் இல்லை. அவர்களுக்கு சீதனம் கொடுத்து சமூக அந்தஸ்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை. "இன்று பலர் இந்தப்பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென்று நினைப்பதில்லை." பலர் எமது மக்கள் முன்னேறி வருகிறார்கள். சீதனம் அழிந்து வருகின்றது என்று கூறுகின்றனர். எமது நாடு விடுதலைப்போராட்டத்தின் தாக்கத்திலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிட்டதென்று கூறப்படும் இந்தக் காலகட்டத்திலும் எமது சமூகத்தினரிடமிருந்து பிற்போக்குத் தன்மைகள் புதிய ரூபத்தில் வளர்ந்து வருகின்றன. இந்தச் சீதனப்பிரச்சனை எவ்வாறு உருவாகியது என்பதையும் நாம் ஆராயவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிகாலத்தில் மனிதர்கள் சிறு குழுக்களாக வாழ்ந்தபோது அந்தக்குழுக்களுக்கு பெண்களே தலைமை தாங்கினர். அவ்வாறிருக்கையில் ஒரு ஆண் ஒரு பெண்ணை மணமுடிக்கும்போது மந்தைகளையும் வேறு பொருட்களையும் கொடுத்துப் பெண்ணை எடுத்தனர். பின்பு அவர்கள் உற்பத்திமுறையில் அபிவிருத்தியடைந்து உபரி உற்பத்தி ஏற்பட்டபோது வர்க்க அடிப்படையிலான சமுதாயம் உருவானது. அதன் பின்பு குவிந்த உபரியைப் பாதுகாப்பதற்காக குடும்ப வாழ்க்கை முறை ஆரம்பமானது. மக்கள் உபரியை உற்பத்தி செய்வதற்காக மந்தை வளர்ப்பு, பயிர்செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். பெண்களுக்கு வீட்டுவேலைகள், குழந்தைவளர்ப்பு ஆகிய வேலைகள் இருந்ததினால் அவர்களால் அதிக நேரத்தைச் செலவளித்து உபரியைச் சேர்க்க முடியவில்லை. ஆனால் ஆண்கள் உற்பத்தியில் அதிகளவு நேரத்தைச் செலவளிக்க முடிந்தமையால் கூடியளவு உபரி உற்பத்தி ஆணிடமே சேர்ந்தது. இதனால் அவனிடம் குவிப்புத் தன்மையும் காணப்பட்டது. இதனால் ஆணே குடும்பத்திற்குத் தலைமை தாங்கினான்.

குழுமுறை அழிந்து சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கான குடும்பமுறை உருவாகியபின் ஒரு குடும்பத்திலிருக்கும் ஆண் இன்னுமொரு குடும்பத்திலிருக்கும் பெண்ணையே மணமுடித்தனர். அப்போது ஆண்கள் மணமுடிக்க பெண்ணை எடுக்கும்போது உற்பத்திக்கான மூலதனங்களைப் பெற்று அதனால் கூடிய உற்பத்திசெய்து பயன்பெற முயன்றனர். இதனால் ஒரு பெண் மணமுடித்துப் போகும்போது மந்தைகள் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டுசென்றனர். இவ்வாறே மணமுடிக்கும்போது பொருட்களைக் கொடுக்கும் வழக்கம் ஆரம்பமானது. பணம் வழக்கத்திற்கு வந்தபின்பு பணத்தைக் கொடுக்க ஆரம்பித்தனர்.

இன்று எமது சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவ தன்மையே காணப்படுகிறது. அனேகமானோர் நிலத்தையே பிரதான பொருளாக கணிக்கின்றனர். பணம் உள்ள மத்தியதரவர்க்கத்தினர் தமது தகுதிக்காக அதிகளவு நிலத்தை வேண்டுகின்றனர். இவற்றில் உற்பத்தி செய்யாவிட்டாலும் கூடிய நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்க விரும்புகின்றனர். இதனாலேயே நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் பெண்களைத் திருமணம் செய்கின்றனர். அடுத்து கூடிய தங்க நகைகளை வைத்திருப்பவர்களே சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்களாக கருதப்படுகின்றனர். ஆணை வைத்திருக்கும் குடும்பத்தினர் கூடிய நிலம் பணம் இருக்கும் பெண்களையே மணமுடிக்கின்றனர். எமது மக்களிடம் பணத்தையும், நகைகளையும் சேகரித்து வைக்கும் குவிப்பு மனப்பான்மை காணப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் பொருளாதார முறையில் அபிவிருத்தியடையாத தன்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்தப்பிரச்சனைக்குச் சகல உற்பத்திச் சாதனங்களும் சமூக உடமையாக்கப் பட்டால் நிலத்தைக் கொடுப்பதோ அல்லது வாங்குவதோ என்ற நிலைமைக்கு இடமில்லாமல் போய்விடும். எமது நாட்டில் வேலை வாய்ப்பின்மை காணப்படுவதால் பெண்ணிடம் பணத்தைப் பெற்று ஒரு தொழில் முதலீடு செய்து வாழ்நாள் பூராகவும் நிம்மதியாக இருக்கலாம் என நினைக்கின்றனர். இதற்கு அரசாங்கம் சீதனமில்லாமல் மணமுடிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு, வீடுவசதி ஆகிய சலுகைகள் வழங்குவது என தீர்மானித்தால் இந்தப் பிரச்சனைக்கு தற்காலிகமான தீர்வாகக் காணப்படும். இன்று எமது நாட்டிலுள்ள சமூக பொருளாதார அமைப்பு முறையால் இலங்கையில் வாழும் மக்களுக்கு வருங்காலத்தில் உத்தரவாதமில்லை. இதனாலேயே ஒரு பெண் தனியாக வாழமுடியாத நிலை காணப்படுகிறது. தன் மகனைப் படிப்பித்த பெற்றோர்கள் வரும் சீதனத்தில் ஒரு பகுதியை தமக்கு எடுக்கின்றனர். ஏனென்றால் பின்பு அவர்களின் வாழ்க்கைக்கு எந்தவித காப்புறுதியும் இல்லை. பொருளாதார ரீதியான வருங்காலமுமில்லை.

ஒரு பெண் பொருளாதார ரீதியான சுதந்திரமாக (என்றும் தனது தந்தை, சகோதரன், கணவனில் தங்கியிராது) வாழக்கூடிய கல்வி, வேலைவாய்ப்பு, சமூக நிலைமைகள் உருவாக்கப்படவேண்டும். இந்தச் சீதனப் பிரச்சனைக்கு சமூக பொருளாதார மாற்றத்திலேயே தீர்வு காணலாம். அதை விட்டுவிட்டு ஆண்களின் மனமாற்றம் தான் சீதனப்பிரச்சனைக்குத் தீர்வென்றும் அல்லது ஒரு பெண் சீதனம் கொடுக்கக்கூடாதென்பன போன்ற தனிமனித சீர்திருத்தங்கள் தான் தீர்வென்பது தவறாகும்.

சீதனம் ஒழிகவென்ற கோசங்கள் எழுப்புவது இதற்குத் தீர்வைக் கொண்டுவரமாட்டாது. உண்மையாக இந்தப் பிரச்சனைக்கு எதிராக போராடுபவர்கள் சமூக பொருளாதார உறவுமுறைகளின் மாற்றத்திற்கான போராட்டங்களுக்காக பாடுபட வேண்டியது அவசியமாகும்.

---

## இலட்சியங்கள்


பனிக்கட்டியில் சிலைகள் செய்து, அவை கரைந்து போவதைக் கண்டு நாம் கண்ணீர் பெருக்குகின்றோம்.

—வால்டர் ஸ்காட்

---

www.tamilarangam.net

# காணாமற் போனவர்கள் பற்றிய அறிவிப்பு



இந்திய வானொலி
செய்திகள் முடிந்தன
அறிவிப்புக்கள் தொடர்ந்தன.

காணாமற் போனவர்கள் பற்றிய அறிவிப்பு
அங்க அடையாளங்கள்
விபரங்கள், விலாசங்கள்
அறிவிப்பு தொடர்கிறது.

எனது தேசத்திலும்
எத்தனையோ பேர்கள்
காணாமற் போனார்கள்
எந்த வானொலியும்
அவர்கள் சொந்த விபரம்
சொல்லக் காணோம்.

அடர்ந்த காடு—அதில்
தினந்தினம்
எரிப்பு வேட்டை
முடிவில் தோன்றிய
சாம்பற் கோபுரம்
ஒளித்துக்கொண்ட
உண்மைகள் பற்றி —யாரும்
சொல்லக்காணோம்.

இருளில் என்
நிழல் இல்லாமற் போனது
ஒளியைத் தேடிய நோக்கம்
நிழலைக்காணும் ஏக்கம்
திடீரென....
வானப்பரப்பு ஒளி உமிழ்ந்தது
என் நிழலைத் தேடினேன்
காணவில்லை
அண்ணாந்து பார்த்தேன்.

www.tamilarangam.net

இராணுவம் ஏவிய
"பரா"
உச்சந்தலைக்கு மேல்
நின்று எரிந்தது
"பரா"வின் ஒளியில்
காணமற் போன
என் நிழலைப்பற்றிய
கதையையே காணோம்.

அர்த்தம் தேடிய
மூச்சுக்காற்றுக்கள்
அர்த்த சாமங்களில்
அர்த்தம் காணாது
அர்த்தமும் இல்லாது
முடிந்து போன
சோகம் பற்றிச் சொல்லக் காணோம்.

இந்திய வானொலியில்
இன்னமும் இன்னமும் தொடர்கிறது

காணமற் போனவர்கள் பற்றிய
அறிவிப்பு....

ரத்தி


---

சுதந்தரம் ஒரு சமூகத்தை நோக்கி இறங்கி வராது; சமூகமே அதை நோக்கி மேலெழ வேண்டும்; அதைச் சிரமப்பட்டு அடைந்து அநுபவிக்கவேண்டும்.

— சோல்டன்

---

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

36.

— பார்த்திபன்

சாப்பாட்டைக் கட்டி எடுத்து, அம்மாவிடம் சொல்லிக் கொண்டு மீறு பாதைக்கு இறங்கினாள்.காலைக்குரிய காட்சிகள் பாதையிலும் இருந்தன.

இந்திய இராணுவத்தால் தாக்கப்படுவதற்காகவோ அல்லது இனம் தெரியாதவர்களால் கொல்லப்படுவதற்காகவோ எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.குளித்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து கொண்டார்கள்.வெளியே போகப் போபவர்கள் திரும்பி வந்தாலும் வரலாம், வராமலும் விடலாம் என்ற நம்பிக்கையில் வீட்டிலுள்ளவர்கள் தங்களுடைய வழக்கமான கடமைகளை ஆரம்பித்திருந்தார்கள்.

எந்தத் தெருவில் பிணம் இருக்கலாம் என்பது நிச்சயமாகத் தெரியாமல் பல காகங்கள் மின்சாரக் கம்பிகளிலும், வேலிகளிலும் யோசனையில் ஆழ்ந்திருந்தன.இன்னும் சில காலத்தில் மிஞ்சப் போவது நாங்கள் மட்டுமோ என்ற கவலையில் இரண்டொரு நாய்கள் தெருவுக்கு வராமல் சுருண்டு படுத்திருந்தன.

மீறு சுதா வீட்டுப் படலை முன்னால் நின்று "சுதா" எனக் கூப்பிட்டாள்.

"வாறேன்" சுதாவின் குரல் மட்டும் வெளியே வந்தது.

அந்த ஊரிலிருந்த அநேகமான ஆண்கள் வெளிநாடு போயிருந்ததாலும், மற்றவர்களில் சிலர் இந்திய முகாமில் அடைபட்டிருந்ததாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது ஏதோ ஒரு காரணத்தால் மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருந்ததாலும் ஊரில் எஞ்சிய வயோதிபர்களும், பெண்களும், சிறுவர்களும் நெருங்கியிருந்தார் கள் .ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தால்தான் தற்போதைய சூழலில் வாழ முடியும் என்பதை காலதாமதமாகினாலும் ஓரளவுக்கு அவர்கள் புரிந்தி ருந்தார்கள்.

இந்த வகையில் மீனுவும், சுதாவும் தோழிகளாகியிருந்தார்கள். வயிற்றுப் பசி தொடக்கம் அரசியல் வரை அலசுவார்கள். மீனு வீட்டின் பரி தாபத்தைப் பூரணமாக உணர்ந்தபின்தான் தனது உறவினர்களைப் பிடித்து தான் வேலைசெய்யும் பழம் பதனிடும் தொழில் நிலையத்தில் மீனுவுக்கும் வேலை எடுத்துக் கொடுத்தாள்.

இதன்பின் மீனு சுதாவுடன் மிகவும் நெருங்கி விட்டாள். இந்த உதவி தங்களுடைய குடும்பத்துக்கு எவ்வளவு தூரம் உதவியிருக்கிறது என்பது பற்றி மீனு ஒருநாளைக்கு ஆகக் குறைந்தது இரண்டு முறையாவது சுதாவுக்கு சொல்ல மறக்க மாட்டாள்.

"சாப்பாடு முடிய லேற்றாயிற்றுது" சுதா கைப்பையில் சாப் பாட்டைத் திணித்தபடி வெளியே வந்தாள். இருவரும் பாதையில் பரவினார் கள்.

சூரியன் அங்குலம் அங்குலமாக தனது வழமையான பாதையில் நகர்ந்தது. மேகங்கள் வறட்சியாகப் பரவியிருந்தன.

பாதையின் இருமருங்கிலுமிருந்த வீடுகளில் அல்லது குடிசைகளில் ஏதோ ஒரு பாதிப்புக் காரணமாக மயான அமைதி நிலவியது அல்லது இருள் சூழ்ந்திருந்தது.

சில வீடுகள் மட்டுமே வித்தியாசமாக செழிப்படைந்திருந்தன. புதிதாகத் தோன்றிய மதில்களும், பாதைவரை கேட்ட படப் பாடல்களும் ஜன்னல்களில் தெரிந்த திரைச் சீலைகளும் அந்த வீடுகளுக்கு டொச்மார்க், டொலர், பிராங்க் போன்றவற்றில் ஏதாவது வந்து கொண்டிருப்பதைச் சூச மாகத் தெரிவித்தன.

"நல்ல காலம் நேற்று ஆமிக்காரனிட்ட இருந்து தப்பினது" என்று சுதா சொல்லும்போது நேற்றைய சம்பவத்தை நினைத்து மெய் சிலிர்த்தாள்.

"எவ்வளவு காலத்துக்கு உப்பிடித் தப்பேலுமோ?" என்றமீனு உண்மையான பயத்தோடு சொன்னாள்.

"என்ன மாதிரி நிலமை மாறிவிட்டுது பாத்தீரே? இந்தியனாமி வரேக்க நாங்களெல்லாம் எப்பிடிச் சந்தோசப்பட்டம். எங்களைக் காப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்தறதுக்கும் ஆக்கள் இருக்கினமெண்டு நினைச்சம்.இப்ப என்னடா எண்டா எல்லாம் தலைகீழா மாறிபிட்டுது.இந்தியன் ஆமி எங்களையே தாக்குமெண்டு ஒருத்தரும் நினைச்சுக்கூடப் பாத்திருக்க மாட்டினம்" சுதா வருத்தத்துடன் சொன்னாள்.

இந்த விடயத்தைப் பற்றி அவர்கள் பலமுறை கதைத்திருந்தாலும் அவர்களிடமிருந்த அங்கலாய்ப்பு மறுபடி மறுபடி கதைக்க வைத்தது.

"சனங்கள் அந்தமாதிரி நினைக்காததில பிழையில்லே.எங்கட அபிப்பிராயத்தை ஆர் எப்ப கேட்டவை?தாங்கள் செய்யிற எல்லாத்தையும் நாங்கள் எல்லாரும் ஏற்றுக் கொண்டிட்டம் எண்டு தாங்களே சொல்லிக் கொண்டிருக்கினம்.உப்பிடித்தான் உந்த விசயத்திலயும் நடந்தது.இந்தியாவை உதவி செய் எண்டு நாங்க கத்தேக்க ஆரும் அது பிழையெண்டு சொல்லேல. சொல்லப்போனா நல்லாக் கத்தச் சொல்லி ஊக்கப்படுத்தினம்.இந்திய ஆமி வந்தாப் பிறகும் வடிவா ஒண்டும் விளங்கப்படுத்தேல.அவங்கட ஆமெட் காறிலயும்,ஜீப்பிலயும் கொடியைக் கட்டிக் கொண்டு திரிஞ்சினம். அவன் எதிரியாய் போன உடன அவங்களோட தொடர்பு வைச்சா கொண்டு போடுவோம் எண்டு வெருட்டினம்.இப்பிடியே எல்லாத்துக்கும் நாங்கள் பேசாம இருந்தே சீரழிஞ்சு போறோம்."மீனு விரக்தி பொங்கச் சொன்னாள்.மஞ்சுவின் இழப்பிலிருந்து மீனு விரக்தியடைந்துவிட்டாள்.அதன் பின்பு நடைபெற்ற சம்பவங்களால் வெறுப்பும் சேர்ந்து கொண்டது.

"மெல்லமாய் கதையும்.நாங்கள் இப்பிடியெல்லாம் கதைக்கிறமெண்டு அறிஞ்சாலே சுட்டுக் கொண்டு போடுவாங்கள்.பிறகு இந்தியனமியோட பருத்தவன் இல்லாட்டி தகவல் குடுத்தவன் எண்டு சொல்லிப்போடுவாங்கள்"சுதா மெல்லிய குரலில் எச்சரித்தாள்.பயம் வியர்வைச் சுரப்பிகளைத் தீண்டியது.

மீனுவும் நிறுத்திக் கொண்டாள்.சுதா சொன்னதிலிருந்த உண்மை அவளையும் எச்சரித்தது.'நான் திரும்பி வரும்வரைக்கும் அம்மா வாசலில நிப்பாள்.தற்செயலா திரும்பாட்டி...?'என்று நினைத்துக் கொண்டதும் கண்களில் இலேசாக கண்ணீர் அரும்பியது.

பஸ்தரிப்புக்கு வந்து,மினிபஸ் வர ஏறி,இறங்க வேண்டிய தரிப்பில் இறங்கி தொழிற்கூடத்திற்கு வந்தார்கள்.

ஏற்கெனவே வந்திருந்த பெண்கள் தங்களுடைய பாதுகாப்பு உடைகளை அணிந்துகொண்டு வேலையை ஆரம்பித்திருந்தார்கள்.வெளிச் சூழலுக்கு ஒவ்வாத சிரிப்பும்,அரட்டையும் நிலவியது.

மீனுவும்,சுதாவும் சுமந்து வந்த கைப்பைகளை உரிய இடத்தில் வைத்துவிட்டு,கவச உடைகளை அணிந்து கொண்டு மற்றவர்களுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேலையில் இணைந்தார்கள்.

அந்த இடம் முழுவதையும் பழங்களின் நறுமணம் நிரப்பியிருந்தது. நாசிக்குள் சுகமாகப் புகுந்தது.

"உனக்கு கலியாணம் பேசப்படுகுதென்டு கேள்விப்பட்டம். மெய்தானே?"ஒருவன் விசாரிக்க, மற்றவர்கள் விபரமறிய ஆவலானார்கள்.

"உந்த விசயங்கள் உங்களுக்கு உடன கிடைச்சிரும். வீட்ட ஆமிக்காறங்கள் உடைச்சா என்ன, துரைபாவது சுட்டா என்ன ஒருத்தருக்கும் தெரிய வராது" என்று கல்யாணப் பேச்சு சம்பந்தப்பட்டவன் செல்லமாக கோபித்துக் கொண்டான்.

"சரி சரி. ஆக பல் பண்ணாதை. மாப்பிளை எவடம்? ஊர்தானே? இல்லாட்டி வெளிநாடோ?" முதலில் ஆரம்பித்தவன் மறுபடி கருவினான்.

"ஊருக்க ஆர் இருக்கினம்? இவர் கனடாவில இமிக்கிறேசன் கிடைச்சு இப்பதான் வந்திருக்கிறார்" என்று சொல்லி அவன் வெட்கப்பட்டான்.

"பிறகென்ன? இனி இப்பிடி நாள் கணக்கா பழங்களைப் பிசைபத் தேவையில்லை. கலியாணம் முடிஞ்ச கையோட கனடாவுக்கு கூட்டிக்கொண்டு போடுவினம். அங்க போனாய் பிறகென்ன? தனிவீடு, கார்" முதலில் ஆரம்பித்தவன் ஆற்றாமையோடு சொல்ல இன்னும் பலர் ஏக்கப் பெருமூச்சை வெளியேற்றிக் கொண்டார்கள்.

அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மீரா தனக்குள் வெந்து கொண்டிருந்தாள். சுற்றி நடக்கும் சம்பவங்களுடன் சம்பந்தப்படாமலிருக்க இவர்களால் எப்படி முடிகிறது என்று அவளுக்கு வியப்பாக இருந்தது.

"உங்கட வீட்டால எவ்வளவு குடுக்கினம்?" என்று உரையாடல் மறுபடி ஆரம்பமானது.

"ஜேர்மனியில கனபேர் வேலையில்லாம இருக்கிற படியா கனடாமாப்பிளைக்கு கூடவாய்த்தானிருக்கும்" ஒருவன் தான் அறிந்ததை தெரிவித்தான்.

"ஒன்டரையும், வீடும், காணியும் குடுக்கிறம். அவையளுக்கு எந்த மாதிரிக் குடுக்காட்டி பிறகு ஊர்ச்சனம் பகிடி பண்ணும்" கலியாணம் பேசப்பட்டவள் பெருமையாகச் சொன்னாள்.

மீரா மறுபடி வெம்மையானாள். கையை ஆத்திரத்துடன் நெரித்தாள்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்




ஆசிரியர் : ஆசிரியர்குழு

முகவரி : A.Velayutham
Mittwegstr 21
4300 Essen 1

விலை : 3,- டி.எம்

- இரு மாதத்துக்கு ஒரு முறை வெளியாகும் சஞ்சிகை.
- அரசியற் கட்டுரைகள் பிரதானமாக உள்ளன.
- தமிழ் பேசும் மக்களை முற்போக்கு அரசியற் சிந்தனை கொண்டவர்களாயும், சமூக மாற்றத்திற்கான தெளிவுள்ளவர்களாயும் மாற்றுதல் என குறிப்பிடப்பட்டுள்ளது.

www.tamilarangam.net




வீரகேசரிச் செய்திகள்.

8.11.88

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் 7.11.88 அன்று காலை இடம்பெற்ற ரகளை, தீவைப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து தப்பியோட முயன்ற கைதிகள் மீது இராணுவம் சுட்டதில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் 21 பேர் காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரியவருகிறது.

காலியில் இரு மாணவர்கள் உட்பட 6 இளைஞர்கள் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

9.11.88

அநுராதபுரத்தில் பி.குசும்சாந்தா, மகாவிலாச்சியைச் சேர்ந்த ஜி.சோமதாச, லக்கலையில் குமார, காலியில் பி.லக்ஸ்மன், கத்தரவியத்தவில் விஜயதிலகா, எஸ்.ஒப்பநாயக்க, மானவல்லையில் ஏ.சிறிபால, வீரகெட்டியாவில் ஜே.ஏ.தர்மதாச ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கண்டியில் தேநீர்கடைமீது குண்டு விழுந்ததில் ஊழியர் ஒருவர் பலியானார்.

வடக்குக் கிழக்கில் 19ம் திகதிவரை ஆழ்கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மொரவக்கையில் மாணவன் ஒருவன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

10.11.88

கடந்த நாற்பது வருடங்களாக நிலவிவந்த நாடற்றோர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாடற்றவர்களுக்கு நடைமுறையில் பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் 9.11.88 அன்று நீண்ட விவாதமோ எதிர்ப்போ இன்றி சகல நிலைகளிலும் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ் கச்சேரியடியில் கார்க் குண்டு வெடித்ததில் 4 பேர் பலியாகினர்.

காலி வக்கவல்ல பாதையில் தேநீர்க்கடை நடத்திவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஈ.வி.பி.லக்ஸ்மன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11.11.88

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 25 கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

காலியில் நந்தசேன, பகலையில் கல்லூரி அதிபர் திலகசிறி, திஸநாயக்க, வெலிமடையில் எச்.எம்.பாருக் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

எல்ல என்ற இடத்தில் 5 பேர் கொல்லப்பட்டு வீட்டுடன் எரிக்கப்பட்டனர்.

அண்மையில் பெலவத்தை, வெலிக்கடைச் சிறைச்சாலைச் சம்பவங்களையடுத்து நீதி அமைச்சர்திரு. நிஸங்க, பிரதி மந்திரி திரு. செல்டன் ரணராஜா ஆகியோர் திடீர் இராஜினாமாச் செய்துள்ளனர். புதிய நீதி அமைச்சராக குருவலை எம்.பி திரு. ஈ. பி போல் பெரேராவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

14.11.88

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.ஆர். எல்.எவ் ஐ ஆதரிப்பதென்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற்குழு முடிவு செய்துள்ளது.

கிக்கடுவ பகுதி சுதந்திரக்கட்சி கிளை ஒன்றின் தலைவரான வசந்த என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலையொட்டி இந்தியப் பெண் பொலிசார் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பதாக இந்திய பாதுகாப்பு மந்திரி தெரிவித்துள்ளார்.

15.11.88

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பில்கெட்டியாவ சந்தியில் வைத்து வழிமறிக்கப்பட்ட பஸ் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 27 பயணிகள் கொல்லப்பட்டனர்.

மகசின் சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தில் ஈடுபடவிருக்கின்றனர்.

28.10.88 (டெய்லி நியூஸ்)

16.09.88 இலிருந்து 14.10.88வரையிலான காலப்பகுதியில் வடக்கு, கிழக்குப்பகுதியில் கொல்லப்பட்ட பொதுமக்களின் தொகை 35. தென்பகுதியில் நடந்த கொலைகள் 207.

28.10.88 (ஐலண்ட்)

தென்மராட்சிப் பிரசைகள் குழுத் தலைவர் ராஜசங்கர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
24.10.88 (ஐலண்ட்)

மட்டக்களப்பு கரதா வெளியில் திரிசீராரும், புலிகளும் மோதியதில் இருவர் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

24.10.88 (சன்)

மட்டக்களப்பில் ஈபிஆர்எல்எவ், ரெலோ, விடுதலைப்புலிகள் ஆகிய இயக்கங்கள் மோதிக் கொண்டதில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

16.11.88

வடக்கு, கிழக்கில் உள்ள இந்திய முகாம்களில் சுமார் 5,000பேர்வரை தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

திருகோணமலை பெலிக்கொட்டியாவையில் நடந்த சிங்களப் பொதுமக்கள் கொலைச் சம்பவத்துக்கும் தங்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்துள்ளது.

12.11.88இல் செட்டிக்குளம் பகுதியிலுள்ள புளொட் முகாம் மீது ரெலோ, ஈபிஆர்எல்எவ் ஆகிய இயக்கங்களுடன் சென்ற இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் அல்பிரட், பாபுஜி, அன்பு ஆகிய மூவர் கொல்லப்பட்டதாக புளொட் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி, மிருசுவில், கச்சாய், கொடிகாமம், பருத்தித்துறை வீதி, தாவளை, சாவகச்சேரி, சிவன் கோயிலடி முதலான இடங்களை சுற்றி வளைத்த இந்திய இராணுவம் அப்பாவி இளைஞர்களைக் கைது செய்தது.

கண்டியில் போக்குவரத்துச் சேவைகள் சீர் குலைந்ததால் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

17.11.88
திருநெல்வேலியைச் சேர்ந்த சுந்தரம் வைகுந்தநாதன் என்ற ஈரோஸ் ஆதரவாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தொழில்நுட்பக் கல்லூரி மாணவனை அன்ரன் அலன் அரியாலையில் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் பிரபல பொருளியல் ஆசிரியரான கிருஷ்ணானந்தன் நல்லூரடியில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களில் ஐங்கரன், புலோலியைச் சேர்ந்த சோபனு ஆகியோர் உயிரிழந்தனர்.

நெல்லியடி வதிரியைச் சேர்ந்த பரமலிங்கம் சரோஜினிதேவி, நெல்லியடியைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி, நவிண்டிலைச் சேர்ந்த இளையதம்பி நதீசன், கரவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தியாகராசா, கரணவாயைச் சேர்ந்த நடேசலிங்கம், துன்னாலையைச் சேர்ந்த தருமலிங்கம் தெய்வேந்திரம் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
சரசாலையில் மட்டுவிலைச் சேர்ந்த சுந்தரம் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net

சாவகச்சேரியில் மகேசுகரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

19.11.88
மலையகப் பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

20.11.88
விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிருபராஜா இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கிழக்கு மாகாணத் தேர்தலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 40சதவீதமாகவும், திருகோணமலை மாவட்டத்தில் 30சதவீதமாகவும் வாக்களிப்பு இடம்பெற்றிருப்பதாக தேர்தல் திணைக்கள பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கப் பிரமுகரான ராஜ்குமாரனும் மேலும் 7பேரும் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நிக்சன் என்ற ஈபிஆர்எல்எவ் உறுப்பினரை புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

21.11.88
வவுனியா மாங்குளம் பகுதியில் நாகேந்திரன், குணநாயகம், சிறிராஜன் ஆகிய மூவரை 20 பேர் கொண்ட கோஉஸ்டி சுட்டுக் கொன்றுள்ளது.

ஈஎன்டிஎல்எவ்வின் கிளிநொச்சி முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் 2 ஈஎன்டிஎல்எவ் உறுப்பினர்களும், 4 விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

22.11.88
நுவரெலியா, அட்டன், பதுளை போன்ற பகுதிகளில் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடைகளும் பூட்டப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள கட்சி உறுப்பினர்கள் விபரம்- ஈபிஆர்எல்எவ் 41 இடங்கள், ஈஎன்டிஎல்எவ் 12 இடங்கள், சிமுகா 17 இடங்கள், ஐதேக 1இடம். கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஈபிஆர்எல்எவ் வெற்றியீட்டியுள்ளது.

23.11.88
செட்டிக்குளத்தில் ஆயுதபாணிகளால் இரு பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

24.11.88
சுன்னாகத்தில் கே.ராஜதுரை என்பவரும், சம்மாந்துறையில் எம்.இஸ்மாயில், நஸீம் என்ற இருவரும், வவுனியாவில் கந்தையா ராஜதுரை என்பவரும் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

...ஜோசப்

இரண்டாவது இலக்கியச் சந்திப்பு 26.11.88இல் டோற்முண்ட் நகரத்தில் நடைபெற்றது. மொத்தம் 100 பேர் பங்குபற்ற விண்ணப்பித்திருந்தாலும் சுமார் 60பேரே கலந்து கொண்டனர். பத்து மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும் சிறிது தாமதமாகவே ஆரம்பமாகின.

இரண்டாவது இலக்கியச் சந்திப்பின் தற்காலிக செயற்குழுவின் அறிமுகப்படுத்தலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சந்திப்பில் பங்குபற்றிய "சிந்தனை", "யாத்திரை", "வெகுஜனம்", "தூலைவிளக்கு", "நமது குரல்" "தூண்டில்", "மக்கள் குரல்", சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் மிகச் சுருக்கமாக தங்களையும், சஞ்சிகைகளையும் அறிமுகப்படுத்தினார்கள். இவர்களுடன் பொது அமைப்பைச் சேர்ந்தவர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

அறிமுகங்களை அடுத்து வாசகர்களின் விமர்சனங்கள் ஆரம்பமாகின. பெரும்பாலான வாசகர்கள் தூண்டில் பற்றியே விமர்சித்தார்கள். இந்த விமர்சனங்களில் சில—

சஞ்சிகைகள் சமூக சீர்திருத்த நிறுவனங்களுடன் இணைந்து செயற்படாமல் தனித்தியங்க வேண்டும். 'தூண்டில்' சஞ்சிகை தென்னாசிய நிறுவனத்தைவிட்டு வெளியே வர வேண்டும்.

தூண்டில் கலம் ஏழில் வெளிவந்த 'ஒப்பந்தங்களும் ஒப்பாரிகளும்' என்ற கட்டுரையில் ஒப்பந்தம்தான் சரியான தீர்வு என்பதுபோல் எழுதப்பட்டிருக்கிறது.

தூண்டில் கலம் பத்தில் வெளியான 'மனிதம் எங்கே?' என்ற கட்டுரை ஒரு பக்கச் சார்பாக எழுதப்பட்டிருக்கிறது.

தூண்டிலில் வரும் செய்திக் குறிப்பில், ஈழத்தில் நடைபெறும் கொலைகளைப்பற்றிய செய்தியில் விடுதலைப்புலிகளை மட்டும் குறிப்பிட்டு எழுதப்படுகிறது; ஏனைய இயக்கங்களின் கொலைகளை 'இனம் தெரியாத நபர்கள்' செய்தார்கள் என்று எழுதப்படுகிறது.

தூண்டில் குறிப்பிட்ட சில இயக்கங்களுக்குச் சார்பாக எழுதுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- முதலாவது இலக்கியச் சந்திப்பில் உலகச் செய்திகளை மொழிபெயர்த்து போடும்படி கேட்டிருந்தோம். ஆனால் தூண்டில் பதினொராவது கலத்தில் தமிழைத் தமிழாக்கிப் போட்டிருந்தார்கள்.
- தூண்டிலில் வெளியான மனிதம் எங்கே கட்டுரையில் எங்களுடைய மனதை புண்படுத்தும்படியாக எழுதியிருந்ததால் காகன் நகரிலுள்ள அனைவரும் சேர்ந்து தூண்டில் சஞ்சிகையை இனிமேல் எடுப்பதில்லையெனத் தீர்மானித்துள்ளோம்.
- முதலாவது சந்திப்பில் தூண்டில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர் கடினமான முறையில் எழுதாமல் எளிமையான முறையில், எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் எழுத வேண்டுமென்றார். ஆனால் தூண்டிலின் பத்தாவது, பதினொராவது கலங்களைப் படிக்கும்போது புரிவதற்கு சிரமமாக இருக்கிறது. உதாரணமாக மனிதம் என்ற சொல்லுக்கு எனக்கு அர்த்தம் தெரியவில்லை.
- தூண்டிலில் வரும் 'களவை மிஞ்சித்தவள்' தொடர்கதையில் பாஸ்போர்ட்டில் படம் மாற்றி கனடாவுக்குப் போவதைப் பற்றி பார்த்திபன் எழுதியிருக்கிறார். இப்படியான சீர்கேடுகளை எழுதுவதை இவர் நிறுத்திக்கொள்ள வேண்டும். தென்னாசிய நிறுவனத்தில் பணியாற்றிய ரஞ்சன் என்பவர் இதே முறையில்தான் கனடா போனார்.
- சிலர் புத்தகங்களை விற்று அந்தப் பணத்தை அகதிகளுக்கு அனுப்பியதாகக் கேள்விப்பட்டோம். அப்படிச் செய்யப்பட்டதா? இனியும் செய்யப்படுமா?

வாசகர்களின் விமர்சனங்களைத் தொடர்ந்து சஞ்சிகை ஆசிரியர்கள் விமர்சனங்களுக்கான தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். தூண்டில் பற்றிய விமர்சனங்களுக்கு கடலோடிகள் அளித்த பதில்களில் சில—

- தென்னாசிய நிறுவனம் சமூக சீர்திருத்த நிறுவனம் அல்ல. அது ஒரு செய்தி ஸ்தாபனம். சஞ்சிகை வெளியீட்டு அடிப்படையிலேயே நாங்கள் அவர்களுடன் தொடர்புகள் வைத்திருக்கிறோம். தூண்டிலில் வரும் எந்த ஒரு எழுத்தையும் அந் நிறுவனம் கட்டுப்படுத்துவதில்லை. எமது கருத்தை எழுத எங்களுக்கும் பூரண சுதந்திரம் இருக்கிறது.
- 'ஒப்பந்தங்களும் ஒப்பாரிகளும்' என்ற நமது கருத்தில் இரண்டாவது பந்தியில் 'இந்தக் கடுதாசி ஒப்பந்தங்கள் மக்களை ஏமாற்றுவதோடு மட்டும் நின்றுவிடாது சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அப்பாவிகளின் உயிரைப் பறித்தும் வருகின்றன' என்று எழுதியதில் ஒப்பந்தம் பற்றிய எமது கருத்தை தெளிவுபடுத்தியிருந்தோம்.
- தூண்டில் எந்த ஒரு இயக்கத்துக்கும் சார்பாக பிரசுரிக்கப்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது கருத்துகளைத் தொடர்ந்து படிப்பவர்கள் இதைப் புரிந்து கொள்வார்கள். ஒரு இயக்கத்தின் தவறுகளை விமர்சித்தால் அது இன்னொரு இயக்கத்துக்கு சார்பானது என்று அர்த்தமல்ல.

- பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளையே நாம் செய்திக் குறிப்பின்சுருக்கமாக வெளியிடுகிறோமே தவிர நாமாகக் கற்பனை செய்தல்ல. ஆகவே விடுதலைப்புலிகளை மட்டும் குறிப்பிட்டு எழுதுகிறோம், ஏனைய இயக்கங்களை குறிப்பிடுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பத்திரிகைகளில் வந்த செய்திகளை திரித்து நாம் பிரசுரித்திருக்கிறோம் என்றால் அதை ஆதாரத்துடன் தெரிவியுங்கள்.

- மனிதம் எங்கே என்ற கட்டுரை பக்கச் சார்பாகவோ, மனதைப் புண்படுத்துவதற்காகவோ எழுதப்படவில்லை. ஈழத்தில் நடைபெறும் மனிதாபிமான மீறல்களைப் பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறோம். தங்களைச் சுற்றி நடப்பதைக் கண்டு கதைக்க, விமர்சிக்க ஈழத்தில் உள்ளவர்கள் பயப்படுகிறார்கள். இதே நிலைதான் இங்கும் இருக்கிறது. நடந்து கொண்டிருப்பவை அநியாயங்கள் என்று நன்கு தெரிந்தாலும் இங்கேயுள்ளவர்கள் அதைக் கண்டித்து எழுத, விமர்சிக்க பயப்படுகிறார்கள். மனிதம் எங்கே என்ற கட்டுரையைப் பற்றி இப்போது விமர்சித்தவர்களும் கூட இயக்கங்களின் பெயரைத் தனிவாகக் கூற முடியாமல் கட்டுரை தவறானது என்று மட்டுமே சொன்னார்கள். இன்னும் சிலர் விமர்சிக்காமலே இருக்கிறார்கள். எங்களது நிலையும் இது தான். இன்னும் துணிவாக எழுதுமளவிற்கு எங்களுக்குக்கூட தைரியம் வரவில்லை. இந்த நிலமை மாற வேண்டுமென்பதற்காகவே மனிதம் எங்கே என்று கேட்கிறோம். இப்படிக் கேட்பது குறிப்பிட்ட சிலருக்கு எதிரானது, மற்றவர்களுக்கு சார்பானது என்று அர்த்தமல்ல. புலிகள் ஏனைய இயக்கத்தவர்களைக் கொன்றாலும் நாம் மனிதம் எங்கே என்றுதான் கேட்போம். ஈபிஆர் எல் எவ்வோ ஏனைய இயக்கங்களோ புலிகளைப் பழிவாங்கும்போதும் நாம் மனிதம் எங்கே என்று கேட்போம்.

- தென்னாசிய நிறுவனத்தில் முன்பு பணிபுரிந்த ரஞ்சன் பாக்போட் மாற்றிக் கனடா போகவில்லை. கனடா தூதரகம் மூலம் விசா பெற்றே போனார்.

கடலோடிகளின் பதில்களைபடுத்து 'கனவை மிதித்தவன்' தொடர் பற்றிய விமர்சனத்திற்கு பார்த்திபன் அளித்த பதிலிலிருந்து—

- கனவை மிதித்தவன் கதையல்ல. வெளிநாடுகளிலிருக்கும் தமிழ் அகதிகளின் நாட் குறிப்பு. நாளாந்த யதார்த்தமே கனவை மிதித்தவனாக வருகிறது. சீர்கேடுகளை சுட்டிக் காட்டுவதும் எமது கடமைகளில் ஒன்று. அந்தத் தொடரில் நானும் வருகிறேன். எனது நண்பர்கள் வருகிறார்கள். ஏனையோரும் வருகிறார்கள். தென்னாசிய நிறுவனத்தில் முன்பு பணிபுரிந்த ரஞ்சன் கனடாவுக்கு எந்த வழியில் போனாலும், பக்கத்திலிருக்கும் கடலோடிகளில் எவராவதுகூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதே வழியில் போனாலும் எனது எழுத்தில் மாற்றமிருக்காது.

- புத்தகங்களை விற்று சேகரித்த நிதியை அகதிகளுக்கு அனுப்புவது பற்றிக் குறிப்பிடப்பட்டது. 'நிஜங்கள்', 'ஜனனம்' என்ற எனது இரண்டு சிறுகதைத் தொகுப்புகளையும் விற்பனை செய்து சேகரிக்கப்பட்ட நிதி தென்னாசியநிறுவனம் ஊடாக யாழ்நகரில் இயங்கிய சற்றடே றிவியூ பத்திரிகையின் அகதிகள் உதவி நிதிக்கு அனுப்பப்பட்டது. தற்போது ஈழத்தில் எந்த ஒரு நிறுவனமும் சுதந்திரமாக இயங்க முடியாத நிலையில் இந்த முயற்சியைத் தொடர முடியவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும்போது தொடருவேன்.

தங்களுக்கான விமர்சனங்களுக்கு சஞ்சிகை ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும் பதிலளித்த பின் வாசகர்களும், மற்றவர்களும் பொதுவான கருத்துகளைத் தெரிவித்தார்கள். அவற்றில் சில—

- "சில தமிழ் சொற்கள் அரசியல்வாதிகளால் புனிதத்தை இழந்து விட்டதால் கேலிக்குரியதாக மாறிவிட்டன. உதாரணமாக வணக்கம் என்றால் கூட்டணியாக என்று கேட்கிறார்கள். தோழர் என்றால் இந்த இயக்கமா என்று கேட்கிறார்கள். இல்லாவிட்டால் சிரிக்கிறார்கள். குறிப்பிட்ட தமிழ் சொற்களுக்குப் பதிலாக அந்நிய மொழியில் உள்ள சொற்களைப் பயன்படுத்தவே பலர் விரும்புகிறார்கள்"

- "தயவு செய்து மாக்சிசம், லெனிசம் என்று கதைக்காதீர்கள். இருபத்தைந்து வருடமாக இதைக் கேட்டு அலந்துபோய்த்தான் இங்கே வந்திருக்கிறோம்"

- "இல்லை. இது பிழையான கருத்து. இருபத்தைந்து வருடங்களாக இதைச் சொல்லியிருந்தால் நாங்கள் இங்கே வந்திருக்க மாட்டோம்"

இரண்டாவது சந்திப்பில் இரண்டு விடயங்களைப் பற்றி முக்கியமாகப் பேசப்பட்டது. ஒன்று இலக்கியங்களில் அரசியல். இரண்டாவது இப்போது வெளிவருபவை இலக்கியங்களே அல்ல என்பது.

இலக்கியங்களில் அரசியல் கலக்கக்கூடாது என்று சிலர் கருத்து தெரிவித்தாலும் அரசியலே இல்லாத ஈழத் தமிழரே இல்லை என்று விளங்கப்படுத்தப்பட்டபோது எவரும் மறுக்கவில்லை. இலக்கியங்களில் நிச்சயமாக அரசியல் கருத்துகள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தற்போது மேற்கு ஜேர்மனியில் வெளிவருபவை இலக்கியங்கள் அல்ல. நீலபத்மநாதன் போன்ற தென்னிந்திய எழுத்தாளர்களின் ஆக்கங்களுடன் இவற்றை ஒப்பிட்டுக் கூடப் பார்க்க முடியவில்லை என்று சொன்னபோது வெளிநாடுகளில் உள்ள வறட்டுச் சூழ்நிலையில் காத்திரமான ஆக்கங்கள் வருவது சாத்தியமற்றது என்று பதிலளிக்கப்பட்டது. இக் கருத்துகளை யாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றுக்காதது (சிலருக்கு நேரமின்மை காரணமாக கதைக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை) வேதனையாக இருந்தது.

வெளிநாடுகளில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளில் பிரசுரமாகும் ஆக்கங்களிலும், தனியாக வெளியிடப்படும் கதை, கவிதை, கட்டுரை நூல்களிலும் (அனைத்திலும் இல்லையென்றாலும் பலவற்றில்) ஆழம் இருக்கிறது. சிறந்த கருத்துகள் இருக்கின்றன. கற்பனைகளை அலசாது பிரச்சினைகளைத் தரும் ஆர்வம் இருக்கிறது. அவற்றுக்கு தீர்வு சொல்லும் முயற்சியும் இருக்கிறது. நாம் மண்ணிலிருந்து எவ்வளவோ தூரத்துக்கப்பாலிருந்தாலும் நாங்கள் அந்நியப்படவில்லை என்பதை நிரூபிப்பதாக பலரின் ஆக்கங்கள் இலங்கை மண்ணைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. வறட்டுச் சூழ்நிலையில் தரமான ஆக்கங்களை உருவாக்க முடியாது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. தாம் மண்ணை நேசிக்கும் உண்மையான கவிஞரை பாலைவனத்துக்கு நாடுகடத்திலும் வயலின் சேற்றில் கால்களைப் பதிக்கும்போது குளிர்ந்த மண்ணீர் நகக்கண்களினூடாக நரம்புகளை ஸ்பரிசிப்பதைப் பற்றி அக் கவிஞராகி கவிபுனைய முடியும். உண்மையான ஆக்கதாரருக்கு சூழ்நிலைகள் பெரிதல்ல. வெறும் கற்பனவாதிகளைத்தான் சூழ்நிலை பெரிதாகப் பயமுறுத்துகிறது.

முதலாவது இலக்கியச் சந்திப்பை விட இரண்டாவது இலக்கியச் சந்திப்பு காத்திரம் கூடியதாகவே இருந்தது. மூன்றாவது சந்திப்பு இன்னும் சிறப்பாக அமையலாம் என்ற எதிர்பார்ப்பை இது உண்டாக்கியுள்ளது. தூர இடங்களிலிருந்தும் வாசகர்கள் பலர் வந்திருந்தது இலக்கியத்தின் மீது பலருக்கு இருக்கும் ஆர்வத்தையும், அக்கறையையும் எடுத்துக் காட்டியது. இது நிச்சயம் உண்மையான ஆக்கதாரர்களையும், சஞ்சிகை ஆசிரியர்களையும் ஊக்கப்படுத்தும்.

மூன்றாவது இலக்கியச் சந்திப்பை நொய்ஸ் நகரில் நடாத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இரண்டாவது இலக்கியச் சந்திப்பு பற்றிய இக் கட்டுரையில் சந்திப்பில் இடம்பெற்ற அனைத்து விடயங்களையும் பக்கமின்மை காரணமாக குறிப்பிட முடியவில்லை. எனவே இங்கு வெளியாகும் ஏனைய சஞ்சிகைகளையும் வாசித்து மிகுதி விபரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

---

செய்த வேலையின் நன்மையை அளந்து பார்த்துக் கூலி
கொடுக்கப் பெறாத ஒரு தொழில் இலக்கியம்தான்.

—ஃப்ருட்

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாக்குப்போராட்டத்தின் ஊடாக உருவான சர்வாதிகாரமும் அங்கு நாம் காணமுடியாதவையும்

.... பிறு

புராதன காலத்தில் நிலம், நீர், கருவிகள் போன்ற உற்பத்திச்சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் சொத்துக்களாய் பொது உடமையாக இருந்தன. இச்சமூகத்தில் உற்பத்திச் சக்திகளது தாழ்ந்த நிலையானது அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டாய் உழைப்பதையே சாதகமாக்கியிருந்தது. இதனாலேயே இதனை புராதன கூட்டு வாழ்குழு உற்பத்திச் சமூகம் என்பர். இங்கு மனிதர்களது முக்கிய தேவைகட்கும் தரக்குறைவான உற்பத்திச் சக்திகட்கும் இடையே நிகழ்ந்த முரண்பாடானது சமூகத்தின் வளர்ச்சிப் போக்கைத் தாண்டியது. இதுவே விவசாயம், கால்நடைவளர்ப்பு போன்ற சமூக உழைப்புப்பிரிவினைதோன்றக் காரணமாயிற்று. இதன்மூலம் உழைப்பின் உற்பத்தித்திறன் அதிகரித்து உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. இவை கூட்டு உழைப்பைவிட தனிப்பட்ட உழைப்புக்களைச் சாதகமாக்கியது. இதன் அவசிய தேவையாகவே அடிமை முறை தோற்றமெடுத்தது. இவ்வளர்ச்சியின் மூலம் சமூகத்தின் சொத்துக்களை அபகரித்து தனிச்சொத்துடமையாக (தமது சொந்தமாக) மாற்றிக்கொண்டதன் மூலம் இப்புராதன கூட்டுவாழ் குழு உற்பத்தி சமூக அமைப்பு முறை உருக்குலைக்கப்பட்டது. தனிச்சொத்துடமையின் தோற்றமானது சமூகச் சொத்தை அபகரித்துக்கொண்ட சுரண்டும் வர்க்கம் சமூகத்திற்குத் தமது உழைப்பை நல்கி வாழ்க்கையை ஓட்டி வந்த நிலை மாறி பறித்தெடுத்தவர்களுக்கு தம் உழைப்பை விற்கவேண்டிய சுரண்டப்படும் வர்க்கம் என்ற பாகுபாட்டை உருவாக்கியது. தனிச் சொத்துடமையின் தோற்றமும், சமூகம் வர்க்கங்களாய் பிளவுண்டதும் ஒரே கட்டத்தில் நடந்தேறின.

ஒடுக்கும் வர்க்கமானது அபகரித்த தனிச் சொத்துடமையைப் பேண சுரண்டப்படும் வர்க்கத்தின் மீது அடக்குமுறையைப் பரப்பி அதனை அடக்கியொடுக்கிச் சுரண்டவும், இவ்வடக்குமுறைக்கு எதிராகவும், அவ்வமைப்பு முறையைத் தகர்த்தெறியவும்; சுரண்டலை இல்லாது செய்து தனிச்சொத்துடமையை இல்லாதொழிக்கவும் சுரண்டப்படும் வர்க்கம் போராடவும் முற்பட்ட வர்க்கப் போராட்டம் தொடங்கியது. இவ்வாறாக தனிச்சொத்துடமையின் தோற்றமானது ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கம் ஒடுக்கியாகவேண்டும் என்ற நிலையையும், அதனை நிர்வகிப்பதற்கான உறுப்பையும் தோற்றுவித்தது. அதுவேதான் நாம் இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கும் காணும் அரசு என்ற அடக்குமுறை இயந்திரம். ஒரு வர்க்கம் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான உறுப்பாக இது திகழ்வதாலேயே இதனை வர்க்க ஆதிக்க உறுப்பு என்பர். இவ்வரசானது தனிச் சொத்துடமை பேணப்படும் சமூகத்தின் சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதியாய் சுரண்டப்படும் வர்க்கத்தை அடக்கியொடுக்குகின்றது. இவ்வொடுக்கும் முறையே சர்வாதிகாரமாகும். இவ்வாறாக மனிதனை மனிதன் ஒடுக்குகின்ற, அடக்குகின்ற தலைமையின் கீழ் எவ்வாறு நாம் மனிதம், சமாதானம், அமைதியைக் காணமுடியும்? இவ்வாறே தனிச்சொத்துடமையின் தோற்றமான அடிமையுடமைச் சமூகத்தில் அடிமைகளை அவர்களின் உடமையாளர்கள் மிருகங்களாக ஒடுக்கிவந்தனர். அதிலிருந்து தோற்றமெடுத்த நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பண்ணையடிமைகளை நிலப்பிரபுக்கள் ஒடுக்கிவந்ததையும் அதன் அழிவில் பிறந்த இன்று நிலவும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சமூகங்களில் தொழிலாளர்கள், உழைப்பாளர்கள் நசுக்கப்படுவதனையும் நாம் காணமுடிகின்றது. இச்சமூக அமைப்புகளில் எல்லாம் சுரண்டலுக்காய் சமூகத்தினை அடக்கியொடுக்கி மூலதனத்தைப் பேணும் சர்வாதிகாரத்தையே காணமுடிகிறது. இச்சர்வாதிகாரமானது அவ்வமைப்பு முறையினைப் பாதுகாக்கும் ஆளும் வர்க்கமான அரசு, நீதிமன்றம், கச்சேரி பொலிஸ், இராணுவம், பிரச்சார நிறுவனங்கள், போதனசாலைகள் வழி நிறுவப்படுகின்றது. இந்நிறுவனங்கள் எப்போதும் ஆளும் வர்க்கத்தினது நலனுக்காக செயற்படுகின்றனவேயன்றி ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களது நலனுக்காக அல்ல.

எனவேதான் இங்கு தமது வாழ்நிலைமைகளைச் சரிவரப் பேணமுடியாது சுரண்டப்படும் வர்க்கம் சுரண்டலுக்கும் அவ் ஆளும் வர்க்கத்திற்கும் எதிராய் அவ் அமைப்புமுறையை மாற்றிடப் போராடுகின்றது. இவ் எழுச்சிகள் தனிச்சொத்துடமையை எவ்வாறு ஒழிப்பது? அதனிடத்தில் எதனை நிறுவுவது? இவற்றிற்குச் செய்யவேண்டியது என்ன? என்பவற்றைத் தெட்டத்தெளிவாய் வரையறுத்துக் கூறும் மார்க்சிச லெனினிச சித்தாந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது. இதன்மூலம் சுரண்டப்படும் வர்க்கம் உணர்மையுற்று ஆயுதமேந்திய எழுச்சியின் மூலம் அவ்வமைப்பு முறையையும், அதனைப் பாதுகாக்கும் நிறுவனங்களையும் தகர்த்து பொதுவுடமைச் சமுதாயத்தை மலரவைக்கின்றன.

பொதுவுடமைச் சமுதாயத்தில் சுரண்டப்படும் வர்க்கத்தினது நலன்கருதி சுரண்டலை ஒழிக்கவும், அரசு செயற்படுகின்றது. இங்கு இது ஒடுக்கப்படும் வர்க்கத்தின் சார்பாய் ஒடுக்கும், ஒடுக்கிய வர்க்கத்தை தட்டி மட்டமாக்குகிறது. இதுவேதான் பாட்டாளி வர்க்கத்தினது சர்வாதிகாரம். எவ்வாறு தனிச்சொத்துடமையைப் பேண முதலாளித்துவ சர்வாதிகாரம் தேவைப்படுகிறதோ அதேபோலவே அத்தனிச் சொத்துடமையை முழுவதுமாகவே இல்லாதொழித்து அதனை மீண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பிருந்ததுபோல சமூகச் சொத்தாய் மாற்றியமைத்திட சுரண்டப்படும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் அவசியமாகிறது. இக்காலகட்டத்தில் கூட மனிதம், அமைதி, சமாதானம் போன்றவற்றை நாம் காணமுடியாது. ஏனெனில் வர்க்கங்களற்ற கம்யூனிச சமுதாயத்தை நோக்கி நகரவேண்டுமாயின் இவ்வொடுக்குமுறை அவசியமாகிறது. அங்குதான் நாம் இவற்றைக் காணமுடியும். எனினும் முதலாளித்துவ, சோசலிச சமூகங்களில் அமைதி சமாதானம், மனிதம் குறித்து கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன. அவ்வாறு அவை எழுவது அவற்றின் உண்மையான அர்த்தத்தில் அல்ல. இது முதலாளித்துவ சமூகத்தில் சுரண்டப்படும் மக்களது எழுச்சிகள், கவனத்தைத் திசை திருப்பி அவ்வமைப்பு முறையைப் பாதுகாக்கவே எழுப்பப்படுகின்றன. அதாவது முதலாளியுடன் சமாதானமாக இருந்து அமைதியைப் பேணின் மனிதம் கிட்டும் என்ற மாயையை ஏற்படுத்தி வடிவத்தில் வேறான ஒடுக்குமுறையைத் திணிக்கிறது. ஆனால் சோசலிச சமூகத்தில் அதற்கெதிராக இருக்கும் முதலாளித்துவ கூடாரங்களைத் தகர்த்தெறிவதற்கான தயாரிப்பை மேற்கொள்ளவும், சமநிலையைப் பேணவும் இது எழுப்பப்படுகின்றது. ஆனால் முதலாளித்துவ சமூகம் அமைதி, சமாதானம், மனிதம் என்பவற்றை இல்லாது செய்து விடுகிறது. சோசலிச சமூக அமைப்பு முறையில் இவற்றை பேறுவதற்காகவே தமது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துகின்றன.

வர்க்கங்களற்ற சமூகத்தை மலரச்செய்யும் வரை இவற்றை அங்கு காணமுடியாது. அது மலர்ந்ததும் அங்கு இவை நிலவுகின்றன. எனவே அமைதி, மனிதம், சமாதானம் போன்றவற்றை நாம் ஏன் வர்க்கங்களாகப் பாகுபடுகின்ற சமூகத்தில் காணமுடியாது என்பது தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கியொடுக்கும் நிலையிலும், அதற்கான சர்வாதிகாரம் பேணப்படும்போதும் கொடிய அடக்குமுறையைத் தான் காணமுடியும். போலியான அமைதி, சமாதானம், மனிதம் போன்றவற்றை விடுத்து உண்மையானவற்றை நிலைநிறுத்தவேண்டுமாயின் வர்க்கப்பாகுபாடு நீங்கவேண்டுமென்பது முடிவாய்த் தெரிகிறது.


இதன் ஓர் அங்கமாய் இலங்கையில்இன்று நிலவும் கொடிய நிகழ்வுகளை நோக்குவோமாயின் அவை எவ்வாறு ஏற்பட்டது? எவ்வாறு நீங்கும்? எப்போது மனிதம், அமைதி, சமாதானம் நிலவும்? என்பது புலனாகும். பிரித்தானிய ஒடுக்குமுறையில் கட்டுண்டுகிடந்த இலங்கையானது 1948ல் கிடைத்த முதலாளித்துவ (போலிச்)சுதந்திரத்தில் இலங்கையிலுள்ள ஒடுக்கும் (முதலி)வர்க்கத்தின் அடக்குமுறையின் கீழ் வந்தது. இவ்வடக்குமுறையின் ஓர் அங்கமாகவே தேசிய இன ஒடுக்குமுறை வெளிப்பட்டு தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப்போராட்டம் உருவெடுத்தது. அன்றுமுதல் இன்றுவரை தமிழ்த் தேசிய இனமானது ஆளும் வர்க்கத்தால் மட்டுமன்றி விடுதலைக்காகப் போராடுவோராலும் அடக்கப்பட்டு வருகிறது.

www.tamilarangam.net

தனிச் சொத்துடைமையை பேண முயலும் ஆளும் வர்க்கம் சமூகத்தில் ஒடுக்கு முறையை நிலைநாட்டுவது குறித்து முன்பே பார்த்தோம். ஆனால் அவ்வொடுக்கப்படும் வர்க்கத்தின் நலனுக்காக போராடுவோரால் கூட ஏன் சுரண்டப்பட்ட வர்க்கம் ஒடுக்கப்படுகிறது என்பதையே தற்போது நாம் கண்டாக வேண்டும். தனிச்சொத்துடைமையைப் பேணும் இலங்கை தரகு முதலாளித்துவத்தின் ஒடுக்கு முறையின் மூலமே தேசிய இன ஒடுக்குமுறை உருவானது. எனவே அவ்வமைப்பு முறையைத் தகர்த்து தனிச் சொத்துடைமையைப் பொதுவுடமைச் சமூகமாக மாற்றியமைப்பதன் மூலமே அவ்வினம் விடுதலை பெற முடியும். தனிச் சொத்துடைமையையும், அவ்வமைப்பு முறையையும் எதிர்த்துப் போராடுவது என்பதும், பொதுவுடமைச் சமூகத்தைப் படைப்பிப்பதென்பதுவும் அங்குள்ள சுரண்டப்படும் தொழிலாளர்கள், உழைப்பாளர்களாலேயே முடியும். ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமோ அவ்வினத்தின் ஒடுக்கும் வர்க்கத்தினதும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் தலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டது. இவர்களது நோக்கு நிலை தாம் ஆளும் வர்க்கமாய் மாறுவதேயன்றி, அவ்வினத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களது நலன்களைப் பெறுவதல்ல. இவர்கள் முதலில் பாராளுமன்றத்திற்கான போராட்டத்தின் வாயிலாகவும், அது இயலாத பட்சத்தில் தனித்த, தத்துவார்த்தமற்ற ஆயுதப் போராட்டத்திலும் இறங்கினர். இவை அனைத்தும் தனிச் சொத்துடைமையிலான உற்பத்தி உறவுமுறையை தீர்ப்பது குறித்து மார்க்சிச, லெனினிசம் என்ன சொல்கிறதோ அதற்கு முரணானதாகவே இருந்தன. எனவே இதன் மூலம் அமைப்பு முறையை மாற்றியமைக்க முடியாது என்பதனை அச் சமூகத்தின் சுரண்டப்படுவோர் கண்டு கொண்டதனால் இவர்களது போராட்ட முன்னெடுப்புகள் நிராகரிக்கப்பட்டன. எப்படியாயினும் தாம் ஆளும் வர்க்கமாக மாற வேண்டுமென்ற இவர்களது கனவும், தொடர்ந்தும் அவ்வினத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியாதென்ற நிலையும் இதுவரை எதிர்த்துப் போராடிய ஆளும் வர்க்கத்துடன் கூடிக் குலாவ வைத்தன. சுரண்டப்பட்ட மக்களது உணர்வுகளை மழுங்கடித்தும், எழுச்சிகளை திசை திருப்பவும் சமாதான ஒப்பந்தங்கள் தோற்றமெடுத்தன. அன்று முதல் அவ்வினத்தின் உரிமைப் போராட்டத்தினைக் கைவிட்டு, அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கான அரசு இயந்திரத்தைத் தோற்றுவிக்கச் செயற்படத் தொடங்கினர். அவ் வினத்தின் மீது திணிக்கப்பட்ட இவ்வொப்பந்தத்தினை நிலைநாட்டவும், ஆளும் வர்க்கத்தினது நலனைப் பேணவும் முயலும் இவர்களிடமோ அன்றி இக் காலகட்டத்திலோ நாம் எவ்வாறு மனிதத்தைக் காண முடியும்? இவர்களுக்கெதிராகப் போராடவும், அவ்வமைப்பு முறையைத் தகர்க்கவும் கூடிய சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வரும் தொழிலாளர்களினதும், உழைப்பாளர்களினதும் போராட்டங்களே மனிதத்தை நிலைநிறுத்தும். நாம் இங்கு முதலாளித்துவ அமைப்பு முறையில் காண முடியாத மனிதத்தை நோக்கி ஒருவரை விட அதனை நிலைநிறுத்துவதற்கான வழிவகைகளையே கண்டறிய வேண்டும்.

www.tamilarangam.net

தனிச் சொத்துடைமையைப் பேணுவதற்கான ஒடுக்கும் வர்க்கத்தின் ஒடுக்குமுறை மட்டுமின்றி, ஒடுக்கப்படுவோரது விடுதலைக்காகப் புறப்பட்டு அவ்வொடுக்கும் வர்க்கத்துடன் சங்கமித்துவிட்ட நிலையில் இவற்றை எதிர்த்துப் போராடுவதற்கும், சுரண்டப்படும் வர்க்கம் தனது ஆட்சியை நிலைநிறுத்தவும் மாக்சிச லெனினிசம் என்ன கூறுகிறதோ அவ்வழியில் நாம் போராட வேண்டும். அதன் வழி சுரண்டப்படும் வர்க்கத்தினது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி, தனிச் சொத்துடைமையை இல்லாதொழித்து பொதுச் சொத்துடைமையின் கீழான சமூக அமைப்பை நிலைநிறுத்துவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும். இங்கும் சுரண்டிய வர்க்கத்தை அடித்து நொருக்கும்போது நாம் மனிதாபிமானிகளாய், ஆத்மீக, சாத்வீக, அகிம்சை, சமாதான வாதிகளாகத் திகழ முடியாது. சுரண்டப்பட்ட மக்களுக்கே நாம் மனிதாபிமானிகள், அமைதி பேணுவோர் என்பது தெளிவாகப் புரிய வேண்டும். இவ்வமைப்பு முறை மூலம் வர்க்கப் பாகுபாடற்ற கம்யூனிச சமுதாயத்திலேயே மனிதன் மனிதனை, அமைதியாக, சமாதானமாக வாழ்கிறான். எவ் வர்க்கத்தினதும் சர்வாதிகாரம் காணப்படாது இங்குதான் நாம் மனிதம், அமைதி, சமாதானத்தை காண முடியும். அதற்கு முன்பு நாம் காணுவது போலியானவையே. அக் கம்யூனிச சமுதாயத்தைத் தோற்றுவிக்க முயலாது அவற்றைத் தேடுவது எமது முட்டாள்தனமே. இதற்கான போராட்டம் எதுவுமின்றி மனிதம் எங்கே? சமாதானம் எங்கே? அமைதி எங்கே என்ற பேச்சுக்கே இடமில்லை. இதையேதான் 29 யூலை 87 சமாதான ஒப்பந்தம் தெளிவுபடுத்துகின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

தூண்டில் இலக்கம் 10இல் 'மனிதம் எங்கே?' என்ற தலைப்பில் வெளியாகிய ஆக்கம் வேதனைக்குரியது. எனவேதான் அதற்கு மாறான எனது வாசகர் கருத்தினை அனுப்பியுள்ளேன். இலக்கியச் சந்திப்புகள் என்று நீங்கள் நடாத்தும் நாடகங்கள் உண்மையானால் எனது இக் கருத்தினை தூண்டிலில் வெளியிடுவீர்கள் என நம்புகிறேன். எனது மனச்சாட்சி நீங்கள் இக் கருத்தை வெளியிடமாட்டீர்கள் என எண்ணியதால் இங்கு உள்நாட்டில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கும் ஐரோப்பா நாடுகளில் வெளியாகும் சஞ்சிகைகளுக்கும் இவ்வாக்கத்தைப் பிரதி செய்து அனுப்பியுள்ளேன். உங்கள் தூண்டிலின் சேவை தொடர வேண்டும். வீண் ஆக்கங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதே என் ஆசை.

இதற்கு முன் வெளிவந்த தூண்டில் வெளியீடுகளில் வீண் கொண்டாட்டங்கள் போன்ற தலைப்புக்களுடன் ஆக்கங்கள் வெளிவந்தன. அதிலுள்ள நன்மையான கருத்துகளை இங்குள்ள மக்கள் பின்பற்றினால் நன்மையாக இருக்கும் என்பதால் இவற்றுக்கான எனது கருத்துகளை எழுதவில்லை. இவ்வாக்கங்களை எழுதியவர்கள் பலர் 'எனக்கும் உனக்கும் இல்லையடி கண்ணே உபதேசம் இது ஊருக்கடி' என்பது போன்று எழுதுவது ஒன்று செய்வது ஒன்று. இவ்வாக்கங்களை எழுதியவர்கள் சிறிது நேரம் ஓய்விருந்தால் எழுதியவற்றில் எவ்வளவற்றை நான் கடைப்பிடிக்கிறேன் என்று சிந்தித்தால் துளிகூட இல்லை என்பதே பதில். ஆனால் இம்முறை உள்ள மனிதம் எங்கே என்ற கட்டுரை அதிகமான பாதிப்பை தரக்கூடியபடியால் என் கருத்தை எழுதுகிறேன். மனிதம் எங்கே கடைப்பிடிக்கப்படுகிறது என்ற கேள்விக்கு உலகில் யாராலும் பதில் சொல்ல முடியாது. அது ஏகாதிபத்திய நாடுகளிலும், சோசலிச நாடுகளிலும், கொம்யூனிச நாடுகளிலும் தேட முடியாதபோது பாசிச நாடுகளின் தலைவர்களாகிய ஜே.ஆர், ராஜீவும் தமிழீழத்தைச் சுடுகாடாக்கி அடக்குமுறை ஆட்சி செய்யும்போது மனிதம் எங்கே என்று தமிழீழத்தில் தேட முடியுமா?

ஒரு நாட்டில் விடுதலைப் போராட்டங்கள் நடக்கும்போது புரட்சிகர இயக்கங்களை பலவீனப்படுத்த பல இயக்கங்களை ஏகாதிபத்தியங்கள் தோற்றுவிப்பதும், பல இயக்கங்களை விலைக்கு வாங்குவதும் இயல்பானவையே. இவ்வாறுதான் 30 ஆண்டுகளுக்கு மேலாக மேடைகளில் தமிழர் உரிமைகளைப் பெற்றுத் தருவதாக போலி நாடகங்களை தமிழ் தலைவர்கள் அரங்கேற்றினார்கள். அடக்குமுறை தலைதூக்கும் போது கோழைகூட வீரனாக மாறுவான். அவ்வாறே தமிழ் இளைஞர் சமுதாயம் வீறுகொண்டு தமிழர்கள் உரிமைகளை போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராடிப் பெறுவதே சிறந்த வழி என்று தமது வழிகளை ஆயுதப் போராட்டத்தில் திருப்பினர். இவ்வாறு தொடங்கிய இளைஞர் அணிகள் சிறந்த இயக்கங்களாக உருவானபோது எகாதிபத்தியங்கள் போலி இயக்கங்களை உருவாக்கினர்கள். ஒரு காலகட்டத்தில் 1983ஆம் ஆண்டுக்குப்பின் 30க்கு மேற்பட்ட இயக்கங்கள் பெயரளவில் உருவாக்கப்பட்டன. பின் இவற்றில் பல இருந்த இடம் தெரியாது போயின. இவை யாவும் யாவரும் அறிந்தவையே.

1983இல் ஏற்பட்ட அபரிமித திடீர் வளர்ச்சி பல போலி இயக்கங்களை மக்கள் மத்தியில் பெரிய இயக்கங்களாகக் காட்டின. கால மாற்றத்தில் இவர்களுக்குள் உட்கட்சிப் போராட்டம், கொள்கைப் போராட்டம், தலைமைப் போராட்டம் என்பன தோன்றி இன்று அவை பல இயக்கங்களாக பிரிந்துள்ளன. இவற்றில் சில இயக்கங்களை இந்தியா தனது கைக்கூலியாகவளர்த்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒழுங்காக நடாத்தும் விடுதலை இயக்கத்தை அழித்து தனது கைக்கூலி பொம்மை ஆட்சியை தமிழீழத்தில் நடத்துவது அல்லது விடுதலைக்கு உதவுவது என்ற பெயரில் முழு இலங்கையையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு என்பது. அரசியல் சதுரங்கத்தில் யார் விழுந்தார்கள் என்பதை ஒருவரும் விமர்சிக்க முடியாத நிலையில் இந்தியா தனது துரோகத்தனத்தை தானும் தன்னால் வளர்க்கப்பட்ட கைக்கூலிகளாலும் இன்று தமிழ்ப் பகுதிகளில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளதுஎட்டயபர் கூட்டத்தால் இன்று தமிழர்கள் அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறர்கள். ஆனல் உண்மையான விடுதலையை விரும்பிய வேங்கைகளால் இன்று போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. படிப்பென்று சிலரும், பணமென்று பலரும் தங்கள் வசதியைத் தேடி வெளிநாட்டுக்கு ஒடியபோதும் தங்கள் சுகங்களை மறந்து உயிரைத் துச்சமென மதித்து ஒரு சிறந்த தலைமையின் கீழ் இன்று போராடிக் கொண்டிருக்கும் போராளிகளையும், போராட்டத்தையும் நாம் வெளிநாடுகளில் கொச்சைப்படுத்திப் பேசுகிறோம். வெளிநாடுகளில் இருந்து சகோதரங்கள் அனுப்பும் பணத்தில் அந்நிய நாடுகளுக்கு ஒடி வருபவர்கள் ஈழத்திலிருந்து வருவதால் தாம்சொல்லும் பொய்களையும், நிலமைகளையும் கேட்க இங்கு ஒரு கூட்டம் இருப்பதால் அளவுக்கதிகமாக போராட்டத்தையும், போராளிகளையும் கொச்சைப்படுத்தி வருகிறர்கள். இன்று ஈழத்திலிருந்து வெளிநாடுகளுக்கு வருபவர்கள் யார்? வசதி படைத்தவர்கள், ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளாதவர்கள், பெயருக்காக, பெருமைக்காக ஈழவிடுதலைப் போராட்டத்தில் கஉடீடங்கள் இல்லாதபோது இருந்தவர்கள், சாற்றுக்குத் தொண்ணூறு வீதம் குடா நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனல் இவ்வாறு 1983ஆம் ஆண்டுக்குப்பின் ஒடி வருபவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறர்கள். அன்று பாலஸ்தீனரைப் போல இன்று நாம் வெளிநாடு என்ற வசதியைத் தேடி ஓடும்போது எற்படும்இடைவெளியை நிரப்ப சிறிலங்கா இனவாத அரசு புதிய குடியேற்றங்களை நடத்தி இஸ்ரேல் பாலஸ்தீனரின் மண்ணைப் பறித்ததுபோன்று தமிழ் மண்ணை பறி

www.tamilarangam.net

க்கப் போவதை உணரவில்லை.சரி வெளிநாட்டுக்கு ஏதோ மோகத்தால் ஓடி வந்துவிட்டோம்.ஈழத்தில் நடக்கும் போராட்டத்திற்கு எம்மால் இயன்ற உதவியைச் செய்ய எல்லோரும் தாமாகவே முன்வர வேண்டும். அதை விடுத்து நாம் இங்கு நவீன அடிமை வாழ்க்கை வாழ்வதை சுகமென எண்ணி எமது கடமைகளை செய்யத் தவறுவோமாயின் நாளைய எமது சந்ததிகளுக்கு பதில் கூற வேண்டியவர்களாவோம்.ஆனால் நாம் எமது பங்களிப்பை செய்யும் பொழுது உண்மையான விடுதலைப் போராட்டத்தை யார் மேற் கொள்கிறார்கள் என்பதை அறிந்து பங்களிப்பைச் செய்ய வேண்டும். அதை விடுத்து போலி அமைப்புகள், போலி நிறுவனங்கள், போலி இயக்கங்களுக்கு உதவுவது எட்டப்பர் கூட்டங்களையும், ஏமாற்றுக்காரர்களையும் வளர்க்கவே உதவும்.

இன்று உண்மையான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு இயன்றளவு எவ்வளவு அதிகமாக கடமையைச் செய்ய முடியுமோ அதை செய்ய ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.ஏனெனில் இன்று ஒரு புறம் இந்திய அடக்குமுறை, மறுபக்கம் சிறிலங்கா பாசிச அரசின் அடக்குமுறை, மறுபக்கம் இந்திய, சிறிலங்கா கைக்கூலிகளான எமது மாற்று இயக்கங்களின் அடக்குமுறை.எனவே எமது தமிழீழப் போராட்டத்திற்கு நாமே பங்காளர் ஆவோம்.அதைவிடுத்து உண்மையான போராட்டத்திற்கு பங்களிக்கச் சொல்லி முன்வருபவர்களுக்கு 'மனிதம் எங்கே' என்ற தலைப்பில் உள்ள கருத்துப் போல பதில் அளிக்கக் கூடாது.நீங்கள் போலி நிறுவனங்களுக்கு, அகதிகளுக்கு என்று கொடுக்கும் நிதி முழுமையாக இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஈழம் போய் சேருவதில்லை.அக் காசினை இங்கு சுரண்டுவதுபோக மிகுதி ஈழத்தில் சிங்கள குடியேற்றத்திற்கும், சமய மாற்றத்துக்கும் பயன்படுத்துகிறார்கள்.விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கும் நிதியில் குண்டுகள் மட்டும் வாங்கப்படுவதில்லை.அகதிகளுக்கு, அநாதைகளுக்குப் பயன்படுகிறது.ஒரு சுதந்திர நாட்டை மீட்க நடைபெறும் போராட்டத்திற்கு உதவுகிறது.அழிந்து போக இருந்த தமிழரின் வீரம் மீண்டும் உலகிற்குக் காட்டப் பயன்படுகிறது.தமிழன் அடிமையாக வாழ விரும்பவில்லை.உலகில் தனக்கென நாடில்லாமலும் வாழ விரும்பவில்லையென்பதை உலகிற்குக் காட்ட உதவுகிறது.தற்போது உலகில் நான்காவது இராணுவ பலம் பொருந்திய இராணுவத்தை எதிர்க்க உதவுகிறது. எனவே இன உணர்வு கொண்ட தமிழரே சிந்தியுங்கள்.எமக்கெனப் போராடும் வேங்கைகளுக்குத் தாராளமாகப் பங்களியுங்கள்.

நான் இங்கே பங்களிப்பதால் எனது சகோதரனோ, உற்றார், உறவினரோ துரோகிகளாகவும், எட்டப்பர்களாகவும் மாறினால் தண்டிக்கப்படக் கூடாது என்ற குறுகிய வட்டத்திற்குள் இருக்க விரும்பாதீர்கள்.உலகில் விடுதலை அடைந்த நாடுகளிலும், விடுதலை அடையப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளிலும் சகோதர யுத்தங்கள் தவிர்க்க முடியாத அரசியற் காரணங்களுக்காக நடைபெறுவதைக் காணலாம்.பகுத்தறிவுள்ள மனிதனால் இவற்றை உணர முடியும்.

www.tamilarangam.net

ஆனால் இங்குள்ளவர்களால் இவை உணர்ந்தும் கூட தம்முடைய வசதிகளை இழக்க விரும்பாமல் போராட்டத்தைக் குறை கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை. மனிதம் எங்கே என்று ஐரோப்பிய நாடுகளிலும், மற்றைய வெளிநாடுகளிலும் நவீன அடிமைகளாக வாழ்ந்து கொண்டு, தமிழீழத்தில் நடப்பவற்றை கண்ணால் பார்க்காமல், வேண்டாதவர்கள் மிகைப்படுத்திக் கூறுவதை கேட்கிறோம். ஆனால் வளர்ந்த ஐரோப்பிய நாட்டில் எங்கிருக்கிறது மனிதம்? மனித உரிமைச் சங்கங்கள் என்றும், சர்வதேச மன்னிப்புச் சபை என்றும் இன்னும் பற்பல அமைப்புகள் உள்ள நாட்டிலேயே மனிதன் தனது மனித உரிமையை முறையில் பயன்படுத்த முடியாமல் இருக்கிறான். மற்றும் இன்று இந் நாடுகளில் இனத் துவேசம், நிறவெறி என்பன இன்னும் காணக் கூடியதாக உள்ளது. தமிழர்கள் நவீன அடிமைகளாக சுதந்திரச் சிறை போன்ற அமைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எட்டப்பர்களும் துரோகத்தையே வாழ்க்கையாக கொண்டவர்களும் இனத்தை, மொழியை விற்று ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டிற்காக தமது வாழ்க்கை முறைகளை அர்ப்பணித்து வெளிநாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாட்டில் எமது சகோதரர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தம்மால் இயன்ற கடமையைச் செய்யும்போது சுகபோக வாழ்க்கை வாழும் எட்டப்பர்களும், துரோகிகளும் தேவையில்லாத முறையீடுகளைச் செய்து, காட்டிக் கொடுத்து எமது சகோதரர்கள் பலர் ஐரோப்பிய சிறைகளில் வாழும் நிலைமையை உருவாக்கியுள்ளார்கள். ஆனால் மனிதத்தைக் கதைக்கும் ஐரோப்பாவில் நடக்கும் விசாரணைகளும் அடக்குமுறையைக் கொண்ட சிறிலங்கா போன்றே நடைபெறுகின்றது. பொலிஸ் குற்றச்சாட்டுகளை, பொலிஸ் சாட்சிகள் மூலம் நடத்திக் கொண்டிருக்கிறது. மனிதம் எங்கே என்று கேட்போரே இவைகளைச் சிந்தியுங்கள்.

எனவே தமிழ் இனமானமுள்ள தமிழ் மக்களே எமக்கென்று ஒரு நாடு தேவை. அங்கேதான் நாம் சுதந்திர மக்களாக வாழ முடியும். நாடு மீட்க நடக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள்.

டொன்ஸ்டோவ்

சி. விக்கு

இலக்கியச் சந்திப்பில் இதுவரை நாங்கள் பங்குபற்றியிருக்கிறோமே தவிர நடாத்தவில்லை. சந்திப்பில் பங்குபற்றியிருந்தால் நாடகமா? நடனமா? என்பதை நீங்களே தெரிந்து கொண்டிருக்கலாம். நாங்கள் சந்திப்பு நடத்தினால் உங்களுக்கும் அழைப்பு அனுப்புகிறோம். பங்குபற்றியபின் கருத்தைத் தெரிவியுங்கள்.

உங்களுடைய கடிதத்தை தூண்டிலில் வெளியிடுவோம் என்று நீங்கள் நம்புவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தாகவும் ஆளும் மனச்சாட்சி வெளியிட மாட்டோம் என என்றுவதாகவும் இரண்டு விதமாகக் குழம்பிப் போயிருக்கும் நீங்கள் சரியான ஒரு நிலைக்கு வந்தால்தான் எதையும் கிரகித்துக்கொள்ள முடியும்.

ஆண்டியில் ஆக்கங்களை எழுதியவர்களில் பலர் உனக்கும் எனக்கும் இல்லையடி கண்ணே உபதேசம் இது ஊருக்கடி என்பது போன்று எழுதுவது ஒன்று செய்வதொன்றெனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இவ்வளவு நிச்சயமாகக் குறிப்பிடும் நீங்கள் இதற்கான ஆதாரங்களையும் வைத்திருப்பீர்களாததால் அவற்றை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் ஏனைய வாசகர்களும் அறிந்து கொள்வதற்கு உதவி செய்வீர்களென எதிர்பார்க்கிறோம்.

மனிதம் எங்கே? என்று எந்த நாட்டிலும் கேட்க முடியாதென்றால் ஈழத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது எதற்காக? மனிதன் மனிதனாக வாழப்போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை, ஒரு நாட்டை மட்டும் தேடிக் கொள்வதற்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது என நீங்களே ஒத்துக் கொண்டால் உங்களுடைய விளக்கமும் சரிதான். ஜே.ஆரும் ராஜீவும் மட்டுமல்ல, விடுதலைப்போராட்டம் என்ற பதாகையைத் தாங்கியவர்களும் இணைந்துதான் சுடுகாட்டை உருவாக்குவதால் மனிதம் எங்கே என்ற கேள்வி எழுகிறது.

மூன்றாவது பந்தியில் நீங்கள் குறிப்பிட்டுள்ள 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒழுங்காக நடத்தும் விடுதலை இயக்கத்தை' என்ற கூற்று அர்த்தமற்றது. ஏனெனில் அப்படியெந்த 'ஒழுங்கான' இயக்கமும் இப்போது ஈழத்தில் இயங்கவில்லையென்பதை பலர் இன்று புரிந்து கொண்டுவருகிறார்கள். எட்டப்பர் கூட்டத்தால்தான் தமிழினம் அழிக்கப்படுகிறது. இதைவிட விடுதலை விரும்பிகளால் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. படிப்பென்று சிலரும், பணமென்று பலரும் தங்கள் வசதியைத் தேடி வெளிநாடுகளுக்கு ஓடியபோதும், தங்கள் சுகங்களை மறந்து, உயிரைத் துச்சமென மதித்து விடுதலைக்காக உயிர் கொடுக்க வந்த போராளிகள் பலரும் தங்கள் தலைமையின் தனிநபர் தீர்மானங்களிலும், தலைமையின் சுயநல முடிவுகளிலும் தவறாக வழிநடத்தப்பட்டு அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். விடுதலை மேலுள்ள பற்றினால் இந்த நிலைமையைச் சுட்டிக்காட்டி, சகோதரர்களே பலியாகும் அழிவைத் தடுக்க முயற்சிப்பது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகாது. இப்போது அந்நிய நாடுகளுக்கு வரும் அனைவருமே வசதி தேடித்தான் வருகிறார்கள் என நீங்கள் குறிப்பிட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரச இயந்திரங்களின் அராஜகங்களைச் சகித்துக் கொண்டு தொடர்ந்து மண்ணிலேயே இருந்தவர்கள் தங்களைச் சுற்றியிருப்பவர்களே 'இனம் தெரியாத நபர்களாகி' ஆயுதத்தைத் திசை திருப்பிய போதுதான் அந்த அராஜகத்தை எதிர்கொள்ள முடியாமல் ஓடி வருகிறார்கள். அவர்கள் தாங்கள் அனுபவித்த உண்மைகளைத் தெரிவிப்பது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவது என்று அர்த்தமாகாது. போராட்டம் இவர்களால் கொச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சைப்படுத்தப்படவில்லை. தலைமைகளாலும், இவர்களால் வழி நடத்தப்படுபவர்களாலும்தான் கொச்சைப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஈழத்தில் போராட்டம் நடந்தால் எல்லோரும் நிச்சயமாக உதவி செய்வார்கள். தற்போதைய காலகட்டத்தில் அங்கு வாழும் மக்கள்தான் வாழ்க்கையோடு போராடுகிறார்கள். இராணுவ பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்கிறார்கள். இயக்கங்களின் அராஜகப் போக்கால் துன்பம் அனுபவிக்கிறார்கள். நாம் இங்கு நவீன அடிமை வாழ்வு வாழ்வதை சுகமென எண்ணி, அங்கு புதைகுழிக்குள் சென்று கொண்டிருக்கும் மக்களுக்காகச் செயற்பட, குரல் கொடுக்கத் தவறுவோமாயின் நிச்சயமாக நாளைய சந்ததிக்குப் பதில் கூறவேண்டியவர்களாவோம். நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல் உண்மையான விடுதலைப் போராட்டத்தை யார் செய்கிறார்கள் என்பதை அறிந்து பங்களிப்பை செய்ய வேண்டும். அதை விடுத்து மக்களில் தங்கியிராது, மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்காது தங்களுக்குச் சாதகமாக இருந்தபோது இந்தியாவை மக்களுக்கு நண்பனாகக் காட்டியும், பாதகமாக மாறியபோது எதிரியாகக் காட்டியும், மீண்டும் நண்பனாக மாறுவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இயக்கங்களுக்கும், தற்காலிகக் கூட்டாக இந்தியாவுடன் சேர்ந்தியங்கி, இந்தக் கூட்டு விரைவில் முரண்படலாம் என்பதை அறியாமல் மக்களுக்கெதிராக ஆயுதங்களை நீட்டிக் கொண்டிருக்கும் இயக்கங்களுக்கும் உதவுவது கொலைகாரர்களையும், எட்டப்பர் கூட்டங்களையும் வளர்க்கவே உதவும்.

இந்திய அடக்குமுறை, இலங்கைப் பாசிச அரசின் அடக்குமுறை, இந்திய, இலங்கை கைக்கூலிகளான இயக்கங்களின் அடக்குமுறை என உண்மையை நீங்களே நன்றாக புரிந்திருக்கும்போது இன்று உண்மையான போராட்டம் நடக்கிறது எனத் திருப்பித் திருப்பிக் குறிப்பிடுவது அர்த்தமற்றது. உண்மையான போராட்டத்தில் மனிதம் எங்கே என்று கேள்வி எழ வேண்டிய அவசியமே இல்லை. இந்தக் கேள்வி எழுந்ததிலிருந்தே ஈழத்தில் இப்போது என்ன நடக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். அராஜகம் தலை தூக்கும்போது பயங்கரவாதம் எல்லை மீறும்போது நாங்கள் மட்டும் அல்ல மற்றவர்களும் கேட்பார்கள். நீங்களும் கேட்க வேண்டும்.

அகதிகளுக்கு நிதி சேகரித்த எந்த நிறுவனம் என்று நீங்கள் விபரமாகக் குறிப்பிடாததால் அதற்கு பதிலளிக்க முடியாதுள்ளது. உண்மையான விடுதலைப் போராட்டத்திற்கு நிதி வழங்கினால் நீங்கள் குறிப்பிட்டிருப்பவைகளுக்கு அது பயன்படும். இப்போதுதான் அப்படியான போராட்டம் எதுவும் நடைபெறவில்லையே. எனவே இப்போது அனுப்பப்படும் நிதி எதற்குப் பயன்படும் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

துரோகி என்று சொல்லப்படும் ஒருவரைத் தண்டிக்கும் உரிமையை இன்னொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரோகி எடுத்துக் கொள்வதைத்தான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. குற்றம் சாட்டப்பட்டிருப்பவரை மக்கள் முன் நிறுத்தி பகிரங்க விசாரணையை மேற்கொள்ளுவதுதான் நியாயமானது. அதை விடுத்து யாரோ ஒருவரைக் கொன்றுவிட்டு, அந்தப் பிணத்தின் மேல் தங்களுடைய குற்றங்களை சுமத்திவிட்டு உண்மையான குற்றவாளி 'நீதிமானாகத்' தப்பிக் கொண்டிருப்பதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த அநீதியைத்தான் கண்டிக்கிறோம். ஐரோப்பிய நாடுகளிலும், மற்றைய வெளிநாடுகளிலும் நவீன அடிமைகளாக வாழ்ந்து கொண்டு ஈழத்தில் நடப்பவற்றைக் கண்ணால் பார்க்காவிட்டாலும், தாங்கள் அறிந்த உண்மைகளைக் கொண்டு ஒரு சிலர்தான் மனிதம் எங்கே என்று கேட்கிறார்கள். இயக்கங்கள் என்ற குறுகிய வட்டங்களுக்குள் நின்று கொண்டிருப்பவர்கள் தான் தங்களுக்கு வரும் அறிக்கைகளைப் புனிதப் பத்திரங்களாகக் கருதி ஈழத்தின் உண்மை நிலையைப் பற்றி அறிந்தாலும் அவற்றை உதாசீனப்படுத்தி, தவறாகச் சென்று கொண்டிருக்கும் இயக்கங்களின் விசுவாசிகளாக மனிதாபிமானத்தைக் கொன்ற அராஜகங்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

துரோகத்தையே வாழ்க்கையாகக் கொண்டவர்கள் யார் எந்த உண்மையைக் கூறிக் கதறினாலும் ஏற்றுக் கொள்ளாமல், தலைமையின் உத்தரவை மட்டும் ஏற்று, தம்மைச் சுற்றி நடப்பவற்றைக் கண்டு கொள்ளாமல், இனத்தை மொழியை விற்று, மனிதாபிமானத்தைப் புதைத்து ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரம் மனிதத்தைத் தேடுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை இவர்கள் மறந்துவிடக் கூடாது. இன்று பலவீனமான முறையில் ஒலிக்கும் இந்தக் குரல் விரைவில் பலமானதாகும் என்பதையும் இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது நாட்டிற்காக தங்களுடைய வாழ்க்கை முறையை 'அர்ப்பணித்து' தம்மால் இயன்ற கடமையைச் செய்ய முன்வந்ததாக நீங்கள் குறிப்பிடும் சகோதரர்கள் தங்களுடைய 'கடமை முறைகளில்தான்' பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்டார்கள் என்று நாம் கேள்விப்பட்டோம். மேற்படி சகோதரர்களின் 'கடமை'களினால் பாதிக்கப்பட்டவர்கள் முழு விபரத்தையும் எமக்கு அனுப்பி வைத்தால் இதை அறியாதவர்களும் அறிவதற்காகத் துண்டில் பிரசுரிப்போம்.

தமிழ் இனமானமுள்ள தமிழ் மக்கள் தமக்கென ஒரு நாடு தேவை என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அங்கேதான் சுதந்திரமாக வாழ முடியும் என்பதையும் புரிந்து வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு மக்கள் தேவையில்லை, மக்களில்லாத மண்ணும், எல்லைகளும், அதிகாரங்களும்தான் தேவை என ஆயுதமேந்தியவர்கள் இயங்கிக் கொண்டிருப்பதால்தான் பலர் நாட்டைவிட்டு தப்பி வந்து கொண்டிருக்கிறார்கள். போராட்டம் என்றாலே வெறுப்படைந்திருக்கிறார்கள். ஈழத்திலிருந்தே அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பு

www.tamilarangam.net

எல்லோரிடமும் இருக்கிறது. இவர்களை இப்படி ஆக்கிய, ஆக்கிக் கொண்டிருக்கின்ற அராஜகங்களைத் தட்டிக் கேட்க வேண்டிய கடமையும் எல்லோருக்குமிருக்கிறது. இவற்றை செய்து கொண்டே, இதுவரை நிகழ்ந்த தவறுகள் மீண்டும் நிகழாவண்ணம் உண்மையான போராட்டத்தை முன்னெடுப்போம். எல்லோரும் பங்களிப்போம்.

உங்களுடைய வாக்கியங்கள் அனைத்துடனும் எமக்கு கருத்து முரண்பாடிருந்தாலும் மனிதம் எங்கே? என்ற நமது கருத்துக்கான உங்களுடைய விமர்சனத்திற்கு மட்டுமே பத்திரிகாரியாகப் பதிலளித்துள்ளோம்.

— கடலோடிகள்

தூண்டில் போட்டு எடுத்து வந்த உண்மைச் சம்பவங்களை ஆக்கபூர்வமாக கடச்சட வெளியிட்டமைக்கு எனது நன்றிகள். குறிப்பாக விடுதலைக்கெதிரான பாசிசப் போக்குள் என்ற பகுதியில் கடிதம் எழுதிய ஈழத்து நேயருக்கு எனது பாராட்டுக்கள். உண்மையில் நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கும் 'நாளும் தொடரும் நரவேட்டைகள்' நெஞ்சில் ஈட்டியால் குத்தியமாதிரி வலித்தன.

பிம்பக்

கே. சோதி

தூண்டில் இல. 10இல் 'புதிய ஜனையகம்' என்ற சஞ்சிகையிலிருந்து சில கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. தென்னாசிய நிறுவனம் போன்ற நடுநிலைவகிக்கும் ஸ்தாபனத்தின் தமிழ் சஞ்சிகையான தூண்டிலில் ஒரு குறிப்பிட்ட அரசியலைச் சார்ந்திருக்கும் 'புதிய ஜனையகம்' போன்ற சஞ்சிகையிலிருந்து மாத்திரம் கட்டுரைகளை எடுத்துப் பிரசுரிப்பது தென்னாசிய நிறுவனம் ஒரு பக்க அரசியலைச் சார்ந்திருக்கிறது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. தூண்டில் தனது சொந்த அரசியற் கருத்துகளை ஆசிரியர் தலையங்கத்தினூடாகவும், கட்டுரைகளினூடாகவும் தெரிவிப்பதே அர்த்தமுடையதாகும். பக்கச் சார்புப் பத்திரிகைகளின் கட்டுரைகளை எந்தவிதமான குறிப்புகளுமின்றி அப்படியே பிரசுரிப்பது தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும்.

ஸ்ருட்காட்

காளிதாஸ்

தென்னாசிய நிறுவனத்தின் உதவியுடன் தூண்டில் வெளிவந்தாலும் தூண்டிலில் இடம்பெறும் ஒவ்வொரு எழுத்துக்கும் சுதந்திரமிருக்கிறது. எனவே தூண்டிலில் பிரசுரிக்கப்படுபவைக்கும், தென்னாசிய நிறுவனத்தின் நடுநிலைமைக்கும் சம்பந்தமில்லை. புதிய ஜனையகத்தின் கட்டுரையில் எமக்குத் தெரிந்தவரை உண்மை இருந்ததால் பிரசுரித்தோம். அதனுடன் எமது கருத்தாக எந்தக் குறிப்பையும் எழுதாதது எமது தவறு இனி நிகழாது.

— கடலோடிகள்

www.tamilarangam.net

தூண்டில் சஞ்சிகை பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளாகின்றது. விமர்சனம் சஞ்சிகையையோ, தூண்டிலையோ தூய்மைப்படுத்தும் என்பது உண்மையே. ஆனால் விமர்சனமே சஞ்சிகையாகிவிட்டால் அதன் கதி...? மற்றும் தூண்டிலை விசையாகப் போட்டு விசையாக இழுக்கிறீர்களே, தூண்டில் இட்ட இரையை மீன்கள் கௌவும் வரையாவது பொறுத்திருக்க வேண்டாமா? மீன்கள் தூண்டிலில் மாட்டிக்கொள்ளா விட்டால் கடலோடிகளின் எதிர்பார்ப்புகள் (வாழ்க்கை) சிறப்பாக அமையாது.

தூண்டில் களம் பதினொன்றில் இடம்பெற்ற சட்டத்தரணி பதிலளிக்கிறார் என்பது பிரயோசனமான விடயம். வரவேற்கிறோம். அப் பகுதியில் வைத்தியம் சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கும் சட்டத்தரணிகளா பதிலளித்துள்ளார்கள்? இதன் விளக்கம் அறிய விரும்புகிறேன்.

டோற்முண்ட்

விக்கு பாக்கியநாதன்

விமர்சனங்கள் அதிகரித்திருப்பதால் பக்கங்களும் அதிகரித்திருப்பதை நீங்கள் அவதானிக்கவில்லையா? தூண்டிலில் மீன்கள் சிக்கியபடியால்தான் தொடர்ந்தும் ஆரோக்கியமாக தூண்டிலைப் போட முடிகிறது. எங்களுடைய வாழ்க்கையின் சிறப்பை மட்டும் பார்த்திருந்தால் தூண்டில் போட்டிருக்க முடியாது.

கேள்வி—பதில் பகுதியில் உடல் ஊனமுற்ற ஒருவர் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சட்ட ஆலோசனையைத்தான் சட்டத்தரணிகள் சொல்லியிருக்கிறார்களே தவிர மருத்துவ ஆலோசனையை அல்ல.

— கடலோடிகள்.

எம் நாட்டில் நடக்கும் பிரச்சினைகளை எமது மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகிறீர்கள். இன்றைய நிலையில் சிலர் நாட்டில் நடப்பவற்றை உணர்ந்து செயற்படத் தயங்குகின்றனர். அவற்றைத் தட்டிக் கேட்பதற்கு தூண்டிலுக்கு உரிமையுண்டு!

அன்டெர்நக்

அ. கமலதாசன்

புதிய எண்ணங்களோடு புதிய சமுதாயத்தை அமைக்க தூண்டில் தேவையானவைகளைத் தருகிறது.

ஆலன்

எஸ். விக்ரர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிலுவைகள்

மார்கழி மாதம்
மரபடியும்
குளிரைப் போர்த்தியபடி..

தொலைத்துவிட்ட
சூரியனை
தேசம் தேடுகிறது மீண்டும்..

இயேசுவே
இரட்சிக்க வா

கல்வாரியில் இப்போது
சிலுவைகள் இல்லை.
ஏனெனில் நாமே இங்கு
சிலுவைகளாகிவிட்டோம்.

போர் பகை
பஞ்சம் புரட்சி
பார்த்தாயா
பூமிக்கும் பல
புதிய தொழுநோய்கள்.

அதோ
உனது ஆடுகள்
திசை மாறுகின்றன.
மேய்ப்பனே வா
முகவரி சொல்லிக்கொடு
அவைகளுக்கு..

நீ மீண்டும்
வருவது குறித்து
இரகசியம் வேண்டாம்.'

இம்முறை பெத்தலகேம் இல்லை
இலங்கைக்கு வா

அங்குதான்
ஏரோது மன்னர்கள்
இருக்கிறார்கள்.'



- கார்த்திகேசன் கோவிந்தகுமார் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 டிசம்பர் 1988 கலம்: 12

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு .......... கடலோடிகள்

வெளியீடு ............. தென்னாசிய நிறுவனம்

முகவரி ................. SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.
TEL. 0202-507156

© Nachdruck nur mit Genehmigung des Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற்செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL - 2
WEST GERMANY.